
# தமிழ் முரசு

முரசு: அ ஒலி: 10
1985 ஆவணி

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்




தமிழ் முரசு - 46

## இறுதி வெற்றி ஈழ மக்களுக்கே!

நீளமான பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்கின்றன. பத்திரிகைகள் யாவும் பத்தி பத்தியாக பூட்டான் 'கதைகளை' சுமக்க ஆரம்பித்துவிட்டன. புதிய புதிய ஆருடங்கள்... அரசியல் சதுரங்கத்தில் காய் நகர்த்தல்கள். ஆனால் இத்தனைக்கும் மத்தியிலே ஈழ மண்ணின் நெஞ்சங்கள் நெருப்பைச் சுமக்கின்றன. காலா காலங்களாக கண்ணீரும், செந்நீரும் கொட்டி வளர்த்த ஈழப் போராட்டமானது முதலாளித்துவ அரசியல் சதிகளினால் பின்னடிக்கப்பட்டு விடுமோ.... இத்தனை கால இழப்புக்களும் வீணாகி விடுமோ என்ற ஏக்கம் அவர்களின் உள்ளங்களை சூழ்ந்துள்ளது. இந்த ஏக்கம் நியாயமானதுதான். காரணம்....

போர் நிறுத்தம் என்று ஒருபுறமாகக் கூறிக் கொண்டு மறுபுறமாக சிறிலங்கா அரசபடைகள் ஈழத்தில் தமது வெறியாட்டங்களை நடத்திக் கொண்டு வருகின்றன; கிடைத்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு ஆக்கிரமிப்பாளர்கள் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களைத் திறத்தல், புதிய இராணுவ முகாம்களை ஆரம்பித்தல், உளவாளிகளை ஈழ மக்களிடையே உலவ விடல், தன்னுடைய படைகளைப் பலப்படுத்தல், புதிய ஆட்களையும், ஆயுதங்களையும் தனது படைக்காக 'கொள்வனவு' செய்தல் போன்ற இராணுவத் தயாரிப்புக்களை செய்து வருகின்றனர். இவர்கள் ஒற்றைத் துணையாக இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் மீது மீண்டுமொரு பாரிய வெறித்தாக்குதலை நடத்தும் வகையில் சிறிலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக் கட்சியும், பௌத்த சங்கத்தினரும் சந்தி சந்தியாகச் சிங்களமக்களுக்கு இனவாதத்தை ஊட்டி வருகின்றனர்.

அதே வேளையில் ஈழமக்கள் இரத்தவெள்ளத்தில் மிதக்கும் போது தமிழகத்தில் சுகபோகத்தை அனுபவித்த தமிழ் நாட்டு முதலாளித்துவத் தலைமையும், அறிக்கைகளில் மாத்திரம் அரசியல் நடத்திவந்த பிற்போக்கு சக்திகளும் கைகோர்த்து சுடேற்றச் சதிகளை ஆரம்பித்து விட்டன. முன்னைய 'நாயகியும்' ஒட்டுமொத்தப் போராட்டத்தின் தற்போதைய 'நாயகியும்' முதலாளித்துவப் பத்திரிகைகளில் முன்பக்கப் படங்களாக 'பெரிது'படுத்தப்படத் தொடங்கிவிட்டனர்.

இந்த நிலையில்தான் ஈழப்போராட்டம் தொடர்பான ஈழமக்களின் இதயக்குமுறல்கள் ஈழதேசத்தின் வீதியெங்கும் சுவர்ப்பாட்டு உள்ளங்களாக நிறைய ஆரம்பித்திருக்கின்றன. இந்தக்கட்டத்தில் நாம் ஈழமக்களுக்குக் கூற விரும்புவது ஒன்றைத்தான். பிற்போக்குச் சக்திகளின் சதிகள் எதுவாக இருந்தாலும் இன்று ஈழப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய முற்போக்குச் சக்திகளின் கூட்டில் ஒரு புரட்சிகர ஒற்றுமை உருவாகிவிட்டது.

இம்முன்னணி அனுபவங்களைப் பாடமாகக் கொள்ளும். எக்காரணத்தைக் கொண்டும் ஈழத்தைத் தவிர வேறெந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளாது. ஈழப்புரட்சி வென்றெடுக்கப் படும்வரை நாம் ஏந்திய ஆயுதங்களை இம் முன்னணித் தோழர்கள் கீழே வைக்கப் போவதில்லை. எனவே கலக்கம் வேண்டாம். ஈழப் போராட்டம் தொடரும் - இறுதி வெற்றியை ஈழமக்கள் வென்றெடுக்கப்படும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டான் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக
# ஈழ மக்கள் போர்க்கொடி

காலாகாலமாக சிறீலங்காவின் அரசபீடத்தில் மாறிமாறி அமர்ந்த பேரினவாத அரசாங்கங்களினால் ஈழமக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகள் அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு தேசங்கள் தோறும் ஈழமக்கள் அநாதைகளாய் அகதிகளாய் அல்லலுறும் பரிதாப நிலை ஒரு தலைமுறையே முற்றாக அழிக்கப்பட்டு ஈழதேசமெங்கும் இரத்த ஆறு பெருகு இன்றைய நிலை... இத்தனை இழப்புகளுக்குமான தீர்வு ஈழ விடுதலை ஒன்றில் மாத்திரம் தான் தங்கியுள்ளதேயொழிய பூட்டான் பேச்சுவார்தைகளிளோ அன்றி அதில் வரும்(?) இடைக்காலத் தீர்வுகளிலோ அல்ல என்ற ஈழமக்களின் உறுதியான நம்பிக்கை ..தற்காலிக அமைதி நிலைகளிலேல அற்ப சலுகைகளிலோ மயங்கிவிடாதது ஈழப்போராட்டத்தின் பால் ஈழமக்கள் கொண்டுள்ள அசையாத ஆர்வம் அனைத்தும் இன்று உள்ளக் குமுறல்களாக உணர்ச்சிக் கோஷங்களாக சுவரொட்டிகளாக நீண்டெழும் ஊர்வலங்களாக ஈழ வீதிகளில் வெடித்துள்ளது.

ஆக்கிரமிப்பாலருக்கெதிரான எமது நியாயமான போராட்டம் தொடரவேண்டும். போராட்டத்திற்கான புரட்சிகரத் தன்மைகள் அனைத்தும் குவிந்து கிடக்கும் இன்றைய நிலை மழுங்கடிக்கப்படக்கூடாது. இந்திய அரசு ஈழமக்களின் மனவுணர்வுகளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தும் வகையில் ஈழத்தில் குறிச்சி குறிச்சியாக ஒவ்வொரு மூலையிலும்பல்லாயிரக் கணக்கான சிறுவர்சிறுமியர் பெண்கள் முதியோர் உட்பட ஈழமக்கள் தினந்தோறும் வீதிக்கு வந்துகொண்டிருக்கின்றனர். பேச்சுவார்த்தைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட வேண்டும். ஈழப்போராட்டம் முடுக்கப்படவேண்டும். என்ற கோஷம் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளது –

இந்த வகையில் 2.07.85 அன்று யாழ் மாவட்டத்தில் இரு பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்தன. ஆண்கள் பெண்கள் இளம் பெண்கள் பாடசாலைச் சீருடையுடன் மாணவ மாணவியர் அரச படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்தோர் பாதிக்கப்பட்டோர் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் கொடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது சுன்னாகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு பல கிராமங்களினூடாக இணுவிலை அடைந்து போர் நிறுத்தம் என்ற போர்வையில் அரச படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரின் அட்டூழியத்திற்கு எதிராகவும் இயக்கங்களின் பிற்போக்குத் தனத்திற்கெதிராகவும் கண்டன ஊர்வலம் என்ற சுலோகம் பொறிக்கப்பட்ட திரைச் சீலையை அனேயர் இருவர் ஊர்வலத்தின் முன்னுக்குப் பிடித்துச் சென்றனர். இதேதினம் இதை ஒத்த இன்னுமொரு ஊர்வலம் மானிப்பாயிலிருந்து புறப்பட்டு ஆனைக்கொட்டை யாழ் நகர் ஊடாக பல வீதிகளைக் கடந்து தாவடிச் சந்தியை வந்தடைந்தது. பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான மக்களின் உணர்வுகள் இவ்வூர்வலத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் எதிரொலித்தது.

30.7.85 அன்று வல்வெட்டித்துறையில் பல்லாயிரக் கணக்கான மக்களுடன் 9 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடியில் முடிவுற்றது. ஏறத்தாழ 1 மைலுக்கு மேல் நீளமான இவ்வூர்வலத்தில் பல கோசங்கள் உணர்ச்சிவசப்பட்ட மக்களால் எழுப்பப்பட்டன.

* பேச்சுவார்த்தைகள் வேண்டாம் ஏமாந்தது போதும்"

* மீண்டும் அமைதி நிலை வேண்டாம்; மாவட்டசபை-மாகாண சபை -மாநில சுயாட்சி வேண்டாம்"

* பூட்டானில் மாநாடு பூநகரி சுடுகாடு"

* இந்திய அரசே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி"

* இரவல் படையில் விடுதலை கிடைக்காது"

என மக்களால் எழுப்பப்பட்ட கோசங்கள் மக்களின் உள்ளக் குமுறல்களை எதிரொலிப்பனவாயிருந்தன. இதேதினத்தன்று அச்சுவேலியில் காலை 9 மணிக்கு பெருந்தொகையான மக்களுடன் ஆரம்பமான ஊர்வலமொன்று 15 மைல் நீளமான பாதையினூடு சென்று மீண்டும் அச்சுவேலியை வந்தடைந்தது. "மக்களே புறப்படுங்கள் ஈழத்தை மீட்போம்" என்ற சுலோகம் ஊர்வலத்தின் முகப்பில் காணப்பட்டது. பெருமளவுமாணவர்கள் கலந்துகொண்ட ஊர்வலத்தில் அரசாங்கத்தையும் அதன் கூலிப்படையினரையும் கண்டிக் குத் சுலோக அட்டைகள் பெருமளவில் காணப்பட்டன. இதையொத்த இன்னுமொரு ஊர்வலம் காரைநகரிலும் மேற்கொள்ளப்பட்து.

6.7.85 அன்று பூட்டான் பேச்சுவார்த்தைகளைக்கண்டித்து ஒரு பெரும் ஊர்வலம் ஆரம்பித்தது இவ்வூர்வலம் கள்ளியங்காடு திருநெல்வேலிவரை வந்து மீண்டும் நீர்வேலியை வந்தடைந்தது. இதைஒத்த இன்னமொரு ஊர்வலம் 5.7.85 அன்று காலை 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு மேற்பட்ட மக்களுடன் ஆரம்பமானது. இது பல கிராமங்களைக் கடந்து பி.ப 3 மணிக்கு சுழிபுரத்தை வந்தடைந்தது. இங்கும் மக்களின் குமுறல்கள் கோஷங்களாக ஒலித்தன.

* "பூர்வீக உரிமையதை பூட்டானில் கேட்பது மடமை"
* "ஈழமே எங்கள் மூச்சு, அதற்கில்லை மறுபேச்சு"
* "பூட்டான் பேச்சு, பொழுது விடிஞ்சால் போச்சு"

என்ற கோசங்கள் கோசிக்கப்பட்டன.

இதே வேளையில் பூட்டான் மாநாடு ஆரம்பமான 8.7.85 அன்று யாழ் மாவட்டம் முழுவதும் பூரண கர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டது வவுனியாவிலும் இதையொத்த நிலையே இருந்தது. பேச்சு வார்த்தைகள் ஆரம்பமான தினத்தன்று பேச்சுவார்த்தைக்கெதிரான மாபெரும் ஊர்வலங்கள் சாவச்சேரி, வட்டுக்கொட்டை தெல்லிப்பளை, வடமராட்சி ஆகிய பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. ஒரு ஊர்வலம் யாழ்நகரை கடந்தபோது யாழ்ப்பாணம் முழுவதுமே மக்கள் வெள்ளமாக காணப்பட்டது.

* " மக்களே புறப்படுங்கள் ஈழத்தை அமைப்போம்"
* " பூசாவில் இளைஞர்கள் பூட்டானில் பேச்சா"
* " விழித்தோம் கிளர்ந்தோம் விடுதலை நெருங்கும் போது பேச்சு வார்த்தையா"
* " மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும்"

என்பது போன்ற பல கோசங்கள் ஒலிக்கப்பட்டன.

9.7.85அன்று யாழ் நகரம் முழுவதும் நான்கு திசைகளிலும் இருந்து வந்த எதிர்ப்பு ஊர்வலங்களால் முற்றுகை இடப்பட்டது யாழ் நகரில் உள்ள கல்லூரி மாணவர்கள் ஒருதிசையாயும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் இன்னொரு திசையிலும் அரியாலையிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இன்னொரு திசையிலுமிருந்து ஊர்வலமாகவும் வந்து யாழ் நகர வீதிகளை முற்றுகையிட்டனர். 5 வயது கூடப் பூர்த்தி அடையாத குழந்தைகள் அரிவரி பயிலும் மழலைகள் வயது முதிர்ந்தவர்கள் எல்லோரும் உச்சி வெயிலைப் பொருட்படுத்தாது தூக்க முடியாத சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காட்சி ஈழமக்களின் எழுச்சியை அச்சொட்டாகக் பாட்டிவிட்டது, கிளிநொச்சியிலும் ஹ உற ர்த்தால் கடையடைப்பு, எதிர்ப்பு ஊர்வலங்கள் இடம் பெற்றன.

ஈழதேச வீதிகளை தொடர்ச்சியாக நிறைத்து வரும் இந்த எதிர்ப்பு ஊர்வலங்களும் அதில் பங்குகொள்ளும் மக்களும் அவர்கள் எழுப்பி வரும் உணர்வு பூர்வமான கோஉஷங்களும் மனித உரிமைகள் மீது மதிப்புக் கொண்ட உலகளாவிய மக்களுக்கு இறுக்கமாக உணர்த்தும் உண்மை ஒன்றுதான் ஈழம் தவிர்ந்த வேறு எந்தத் தீர்வுக்கும் ஈழமக்கள் தயாராக இல்லை.

## நிக்காரகுவாவில் ஆக்கிரமிப்புக்கெதிரான

## ஆர்ப்பாட்டம்




சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்றல் நிக்கராகுவாவின் புரட்சித் தினமாகிய யூலை-19ம் திகதி நிக்கராகுவாவிற்கெதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையினைக் கண்டித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொதுமன்றம் (GUES) நடத்திய பெரும் ஆர்ப்பாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## பூட்டான் மாநாடு நிறுத்திவைக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினை குறித்து சிறீலங்கா அரசுக்கும் ஈழ விடுதலை இயக்கங்கள் மற்றும் த.வி.கூட்டணிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதிக்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. கடந்த 8ந் திகதி பூட்டானின் திம்பு நகரில் இந்திய அரசின் அனுசரணையுடன் ஆரம்பமாகிய இம்மாநாடு 6 தினங்கள் நீடித்தது. இப்பேச்சுவார்த்தைகள் முறிவடையும் கட்டத்தில் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியின் தலையீட்டினால் இம்மாநாடு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

## 'சிறீலங்கா படைகள் யுத்த நிறுத்தத்தை மீறுகின்றன' – ஈ.தேசிய விடுதலை முன்னணி குற்றச்சாட்டு.

சிறீலங்கா அரசபடைகள் யுத்த நிறுத்தத்தை மீறி, தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ் மக்களைத் தொடர்ந்து கொடுமைக்குள்ளாக்கி வருவதாக ஈழத் தேசிய விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. சிறீலங்கா படையினரின் யுத்த நிறுத்த மீறல்கள் அதிகரித்து வருமானால் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வது பற்றி தாம் இன்னும் தீர்மானிக்கவில்லை என முன்னணி அறிவித்துள்ளதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறீலங்கா அரசு இராணுவ பலத்தை அதிகரித்து வருகிறது" – ஈ.பு மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி குற்றச்சாட்டு.

ஈழமக்களுக்கெதிரான பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள பெருமளவு இராணுவக் குவிப்பிற்கு சிறீலங்கா அரசு ஆயத்தமாகிவருவதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது. பாகிஸ்தானிடமிருந்து 4 ஹெலிகொப்டர் வசதியுள்ள போர்க்கப்பல்களை வாங்குவதற்காகவும், 60 இராணுவ அதிகாரிகள் விசேட கொரில்லா பயிற்சி பெறுவதற்காகவும் பாகிஸ்தான் சென்றிருப்பதாகவும் இது குறித்து உடன்பாடு ஒன்றில் சிறீலங்கா - பாகிஸ்தான் அரசுகள் கைச்சாத்திட்டிருப்பதாகவும் முன்னணி தெரிவித்துள்ளது. இதுபோல சீனாவிடமிருந்தும் பெருமளவு ஆயுதக் கொள்வனவு நிகழ்த்தப்படுவதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ.பு மக்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து சிறீலங்கா அரசு!

ஈழமக்களைக் கொன்றொழிக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு சிறீலங்கா அரசு தயாராகி வருகின்றது. வடக்கிலுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்குமாறு அவசர உத்தரவொன்று சிறீலங்காவின் பாதுகாப்பு (?) அமைச்சால் விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் ஈழப்போராளிகளின் தாக்குதல்களினால் வடபகுதியில் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களையும் ஆக்கிரமிப்பாளர்கள் விரைவில் திறக்க உள்ளதாகத் தெரிய வருகிறது. அதேசமயம் கொரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக கருவிகளை இத்தாலியிடமிருந்து சிறீலங்கா அரசு வாங்கியுள்ளது.

## காரைநகரில் கடற்படை சுட்டு அப்பாவி மக்கள் மூவர் பலி!

போர் நிறுத்தப் போர்வையிலே சிறிலங்கா அரச படைகள் ஈழமக்கள் மீது தொடர்ந்து வெறியாட்டம் நிகழ்த்திவருகின்றன. காரைநகரில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பஸ்தரிப்பில் நின்ற சுப்ரமணியம் சோதிநாதன்(26) தம்பையா(61), தருமலிங்கம் (45) ஆகியோர் பலியானதுடன் பலர் படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். 22.07.85 அதிகாலை 5மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

## வல்வையில் தாக்க வந்த இராணுவத்தின் மீது போராளிகள் தாக்குதல்.

சிறிலங்கா இராணுவம் கவசவாகனங்கள் சகிதம் விடுதலைப் புலிகளின் முகாமொன்றைச் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட மோதலில் மூன்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அறியப்படுகிறது. இரவு 9.30 மணி முதல் அதிகாலை 4மணிவரை பொலிகண்டிப் பகுதியில் போர் நடந்ததாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் 20.07.85 அன்று இடம்பெற்றது.

## ஜனாதிபதி கொலை முயற்சி... அரசின் அடுத்த சதி நாடகம்.

சிறிலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை குண்டு வைத்துக் கொல்ல முயன்ற சதி அம்பலமானதென்ற சிறிலங்கா அரச செய்தி பொய்யானதென்று ஈழத் தேசிய விடுதலை முன்னணி அறிக்கைமூலம் அறிவித்துள்ளது. இம் முயற்சி தொடர்பாக தன்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை ஈழப்புரட்சியமைப்பும் மறுத்துள்ளது. பேச்சுவார்த்தைகளை முறிப்பதற்காக சிறிலங்கா அரசு செய்த சதியே இது எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல..." - கடத்திய பத்திரிகையாளரிடம் ஈ.பு மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விளக்கம்.

"தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுப்பதே தனிநாடு என்பதன் அர்த்தமாகும். அதற்கு எம்மிடம் உரிய வரலாற்றுப் பின்னணி உண்டு. எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. நாம் அராஜக அரசுக்கு எதிராகவே போராடுகிறோம்."

"மயிலே மயிலே இறகு போடு' என்றால் நிச்சயம் போடாது. நாமே இறகைப் பிடுங்க வேண்டும். அந்நிலையிலேயே எமது போராட்டமும் உள்ளது." இவ்வாறு யாழ் நகரில் கடத்தி விடுதலைசெய்யப் பட்ட 'டெயிலி நியூஸ்' பத்திரிகையைச் சேர்ந்த சிசில் விக்கிரமநாயக்காவுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அளித்த பேட்டி யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழீழ விடுதலைப் புலிகளின் எச்சரிக்கை!

யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக சிறீலங்கா அரசை எச்சரிக்கும் அறிக்கை ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ளது. சிறீலங்கா அரசபடைகள் யுத்த நிறுத்த ஒப்பந் தத்தை மீறியுள்ள பல சம்பவங்கள் இவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே சமயம் அரசபடைகளின் வகுப்புப்படுத்துவதையும் விடுத லைப் புலிகள் கண்டித்துள்ளனர். அத்துடன் மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் வகை யில் சமூகவிரோதச் செயல்களை செய்பவர் களையும் விடுதலைப் புலியினர் வன்மையாகச் சாடியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமெங்கும் பூரண ஹர்த்தால்.

வெலிக்கடைச் சிறையிலே வெறிபிடித்த சிங்கள வேட்டைநாய்களால் கோரத்தனமாகக் கொல்லப்பட்ட விடுதலைப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஈழதேசமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஹர்த்தால், கதவடைப்பு மேற்கொள்ளப்பட்டது. 25,26.07.85 இரு தினங்களும் ஈழம் முழுவதும் ஸ்தம்பித்துப் போயிருந்தது குறிப்பிடத்தக்கது.

## "பூட்டானில் தீர்வு ஏற்படுவது சந்தேகமே!"
## — வாசுதேவ நாணயக்கார.

'இலங்கை இனப்பிரச்சினை குறித்து இலங்கை அரசுக்கும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையில் பூட்டானில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளால் தீர்வு ஏற்படுவது சந்தேகம்" என லண்டனில் பிரித்தானிய பாராளுமன்றத் தொழிற்கட்சித் தலைவருடனான தமது பேச்சுவார்த்தையின் போது நவசமசமாஜக்கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இலங்கை அரசின் ஆதரவாளர்கள் எந்த ஒரு உடன்பாட்டுக்கும் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்குவார்களா என்பது சந்தேகமே என்று கூறிய அவர் தமிழ்ப்பகுதிகளில், சிங்கள மக்களைக் குடியேற்றும் இனவெறித்திட்டம் அதிகாரபூர்வமாக இன்னும் கைவிடப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் தென்பகுதியிலும் பெரும் எரிமலையை இலங்கை அரசு சந்திக்க வேண்டிவரும் என அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்கரகுவா: அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இன்னுமொரு வியட்நாம்



புரட்சியை பாதுகாக்க தயாராகி நிற்கும் நிக்கரகுவாவின் மக்கள் படை.

" நிக்கரகுவாவிலுள்ள அமெரிக்கப் படைகளின் பிரவேசத்தை நாம் நேரடியாக எதிர்கொள்வது நல்லது என்றே நான் எண்ணுகிறேன். ஏனெனில் அவர்களின் ஆக்கிரமிப்பை முறியடித்த பின்பு நாம் புரட்சியின் அடுத்த கட்டங்களை நிறைவேற்றும் தகுதிகளைப் பெற்றுவிடுவோம்."

—டானியல் ஒட்டேகா
(நிக்கரகுவாவின் ஜனாதிபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தொழிலாளர்களின் எழுச்சித் தினமான மே தினத்தன்று நிக்கரகுவா மக்களின் குரல்வளையை நசுக்கமுயலும் சட்டமொன்று சர்வதேசப் பயங்கரவாதத்தின் தலைவனை றேகனால் பிரகடனம் செய்யப்பட்டது. நிக்கரகுவா மக்களின் உயிர்வாழும் உரிமைக்கெதிராக தொடர்ச்சியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் விடுத்துவரும் அச்சுறுத்தல்களின் ஒரு அம்சமே இது. நிக்கரகுவாவின் புரட்சிகர சாண்டினிஸ்திய அரசுக்கெதிரான தனது தொடர்ச்சியான அரசியர்-இராணுவச் சதிகளில் தோல்வியுற்ற அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவாவிற்கெதிரான தனது பொருளாதாரத்தடையினை அறிவித்தது.

இந்தத் தடையினை உத்தியோகபூர்வமாக அறிவித்த போது றேகன் "அசாதாரணவகையில் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தினை சமாளிப்பதற்கான இந்தத் தடையினை ஒரு அவசரகாலப்நிலைப்பிரகடனத்தின்கீழ்க்கொண்டு வருகிறேன்" என அறிவித்தான்.உண்மையிலே இது ஒரு அப்பட்டமான பொய் என்பதும் நிக்கரகுவாவின் மக்கள் அரசைத் தூக்கியெறிந்து தனது கைப்பொம்மைகளை பதவியிலமர்த்துவதற்குமான றேகனின் சதியின் ஒரு அம்சம்தான்இது என்பதும் அனைவரும் அறிந்ததே.

நிலப்பரப்பிலும், சனத்தொகையிலும் பெரும்பான்மை ஆன அமெரிக்க மாநிலங்களைவிடச் சிறிய அளவிலான நிக்கரகுவா, தன்னுடைய அன்றாடவாழ்க்கையை நிர்ணயிக்க சிரமப்படுகின்ற மூன்றாவது உலக நாடுகளில் ஒன்றான ஏழ்மைநாடாகிய நிக்கரகுவா 1979ஆம் ஆண்டு சாண்டினிஸ்தியப் புரட்சி வெற்றியடையும் வரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் உறிஞ்சப்பட்டு வெறும் எலும்புக்கூடாகிவிட்ட நிக்கரகுவா எப்படி அமெரிக்கா என்ற 'மாபெரும் வல்லரசின்' அச்சுறுத்தலாக இருக்கமுடியும். நிக்கரகுவா ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறதுவென இன்னுமொரு அப்பட்டமான பொய்யை றேகன் நிர்வாகம் கட்டவிழ்த்துவிட்டு வருகிறது. ஆனால் உண்மை நிலை என்ன? நிக்கரகுவா இராணுவத்திடம் உள்ள ஆயுதங்கள் பழமையானவை. அந்த நாட்டின் பாதுகாப்புக்கு மட்டும் போனவை. நிக்கரகுவாவில் உள்ள மொத்த ஆயுதங்களின் பெறுமதி அமெரிக்க இராணுவப் பிரிவான பென்டகோவின் ஒரு நாள் செலவுக்கு சமனானது. நவீனரக ஆயுதங்களையும் போர்விமானங்களையும், ஏவுகணைகளையும் குவித்து வைத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் சின்னஞ்சிறிய தேசமான நிக்கரகுவாவினால் தனக்கு ஆபத்து எனக்கூறுகின்ற அப்பட்டமான பொய்யை யாரால் ஏற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய அமெரிக்காவில் யாருக்கு, யாரினால் ஆபத்து என்பதை ஆராய்ந்து பார்த்தால் உண்மை புலனாகிறது. நிக்கரகுவா என்ற தேசம் இன்று அமெரிக்கக் கைக்கூலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறது. அந்த தேசத்தின் அன்றாடஜீவிதம் ஏவுகணைகளாலும் துப்பாக்கிகளாலும், டாங்குகளாலும், துப்பாக்கிகளாலும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. எல்சல்வடோர், கௌதமாலா, கொண்ரோஸ், கொஸ்ராரிக்கா என நிக்கரகுவாவைச் சூழ உள்ள நாடுகளும் சி ஐ ஏ- பென்டகோன் சதியாளர்களும் சேர்ந்து கூட்டுமகாம்களை இந்நாடுகளில் அமைத்து நிக்கரகுவாவிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை ஒருபுறமாக முடுக்கியுள்ளனர்.

அது மாத்திரமல்ல கொடுங்கோலன் சோமசாவின் கூலிப்படைகளாகப் பணிபுரிந்து 50,000க்கு மேற்பட்ட நிக்கரகுவா மக்களை கொன்று அந்த இரத்தத்தில் தங்கள் கைகளை நனைத்துக்கொண்ட வெறியர்கள்ஏறத்தாழ 15000 பேரைத் திரட்டி அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு எதிர்ப்புரட்சிக் கும்பலைஉருவாக்கி ஊட்டி வளர்த்து வருகிறது. கொஸ்ராரிக்கா, கொண்டுராஸ் ஆகிய நாடுகளில் முகாம்களை முகாம்களை அமைத்துள்ள இந்த எதிர்ப்புரட்சிக் கும்பல்கள் அடிக்கடி நிக்கரகுவாவினுள் ஊடுருவிப் பொருளாதாரச்சேதங்களைஏற்படுத்தி வருவதுடன் அப்பாவி மக்களை கடத்தல், கொலைசெய்தல் ஆகிய நீசத்தனங்களையும் அமெரிக்கஏகாதிபத்தியத்தின் கட்டளைக்கிணங்கச் செய்துவருகிறது. இந்தஎதிர்ப்புரட்சியாளர்களையே சர்வதேச பயங்கரவாதத்தின் தலைவனான றேகன் 'அன்புச் சகோதரர்கள்' என்றும் விடுதலைப்போராளிகள் என்றும் பாசமழை பொழிந்தான். அது மாத்திரமல்ல அந்தக்கூலிப்படைக்கு 27 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதற்கான தீர்மானம் ஒன்றையும் நிக்கரகுவாவின் மீது இராணுவ ஆக்கிரமிப்பை அவசியமேற்பட்டால் மேற்கொள்வதற்கான விசேட அனுமதி வழங்கும் தகமையையும் றேகன் அமெரிக்க காங்கிரசில் பெற்றுள்ளான். இவை அனைத்துமே நிக்கரகுவாவின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் நிகழ்த்தப்போகும் ஆக்கிரமிப்பின் ஆரம்ப கட்டியங்களாகவே தென்படுகின்றன.

அதேவேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமில் படித்த பாடத்தை முற்றாக இன்னும் மறந்துவிடவில்லை. நிக்கரகுவாவின் மீது போர் தொடுத்தால் ஆகக் குறைந்த பட்சம் 20,000 அமெரிக்கத் துருப்புகள் கொல்லப்படுவார்கள் என்ற இராணுவ ஆலோசகர்களின் கருத்து அவர்களை மீண்டும் ஒருமுறை யோசிக்க வைக்கிறது. அது மாத்திரமல்ல வீரமும், தேசவிடுதலை உணர்வும் வாய்ந்த பயிற்றப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கரகுவாவின் 50,000 வீரர்களைக் கொண்ட இராணுவம், ஆயுதப் பயிற்சி பெற்ற ஆண்களையும், பெண்களையும் உள்ளடக்கிய பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொண்ட நிக்கரகுவாவின்மக்கள் படை இவை அனைத்துமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சிந்தனையைத் தகர்க்கும் வெடிகுண்டுகளாக அமைந்துள்ளன. இதன் காரணமாக இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே போரை மூட்டி அந்தத் தீயில் தான் குளிர் காய நினைக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவா-கொஸ்ராரிக்கா எல்லையிலும் எதிர்ப்புரட்சிக் கும்பலின் துணையுடன் பதட்ட நிலையை உருவாக்கிவருகிறது.

ஆனல் இத்தனை இன்னல்களையும் தாங்கி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நேருக்குநேர் எதிர்கொள்ளும் வீரஉணர்வுடன் வீதிகளில் தயாராக நிற்கிறார்கள் நிக்கரகுவாவின் அற்புதமான பொக்கிஷமான வீரமிகு மக்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அனைத்து மிரட்டல்களையும் தகர்த்துதனது புரட்சியைப் பாதுகாப்பதற்கான சகல ஆயுதக் கொள்வனவுகளையும் மீண்டும் மேற்கொள்ளப் போவதாக ஸாண்டினிஸ்தியப் புரட்சிகர அரசு அறிவித்துள்ளது. அது மாத்திரமல்ல புதிய வேகத்துடன் எதிர்ப்புரட்சிக் கும்பல்கள் மீது தாக்குதல்களை நிகழ்த்திய நிக்கரகுவாவின் ஸாண்டினிஸ்தியப் புரட்சிப் படைகள் கடந்த வாரங்களில் பெரு வெற்றிகளைச் சம்பாதித்துள்ளன. கடந்த யூன் 13ம் திகதி லாபன்சா என்ற இடத்தில் எதிர்ப்புரட்சியாளன் எடன் பஸ்ரோராவின் எதிர்ப்புரட்சிக்குழுவின் தளங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டு எடன்பஸ்ரோ போர்நிறுத்தம் பற்றிப் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்த எதிர்புரட்சியாளர்களுக்கு டொலர்களை ஊட்டினலும் தொடர்ச்சியான தோல்விகளால் பாதிக்கப்பட்ட மனவுணர்வுடன் தொடர்ந்து இவர்கள் எதிர்ப்புரட்சிக் குழுக்களை விட்டுத் தலைமறைவாகி வருகின்றனர். இதுபற்றி ஒரு எதிர்ப்புரட்சியாளன் அளித்த பேட்டியில் "நாங்கள் கடந்தஐந்து வருடங்களாகப் போராடி வருகிறோம் ஆனல் இன்றுவரை நிக்கரகுவாவின் மண்ணில் ஒரு அங்குலத்தைக்கூட எம்மால் கைப்பற்ற முடியவில்லை!! என்று குறிப்பிட்டது எதிர்ப்புரட்சியாளரின் அஸ்தமனகாலம் நெருங்குவதை நிரூபிக்கிறது.

வீரமிக்க நிக்கரகுவாவின் மக்கள் தமது இரத்தத்தைத் தாரைவார்த்துப் போராடிப்பெற்ற புரட்சியைப் பாதுகாக்க இறுதிவரைபோராடுவார்கள் அதில் வெற்றியும் பெறுவார்கள் என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விரைவில் உணர்த்தப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பிரச்சனைகளுக்குக் காரணம் ஏகாதிபத்திய சக்திகளின் சொந்த நலன்களே

## தொடரும் இனப்படுகொலைகளுக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டத்தில் கருத்து!

'ஏகாதிபத்திய நாடுகள் தமது சொந்த நலன்களை மேலும் விஸ்தரிப்பதற்காக உலகெங்கிலும் திட்டமிட்ட முறையில் பிரச்சனைகளை உருவாக்கி வருகின்றன! கடந்தமாதம் பாரிசில் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய நான்கு இயக்கங்களும் இணைந்து நடத்திய பொதுக்கூட்டத்தில் இக்கருத்து முன்வைக்கப்பட்டது.

1983 யூலை இனப்படுகொலை ஞாபகார்த்தமாகவும், தொடரும் இனப்படுகொலைகளைக் கண்டித்தும் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டம் 27.7.85 அன்று அலெக்ஸாண்டர் ஹமா மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் யூலைப் படுகொலையின் போது கொல்லப்பட்டவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்திற்கு தலைமை வகித்த தோழர் கோவை நந்தன் "83 யூலையில் நடைபெற்ற சம்பவங்கள் கொடுமைகளின் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தன" என்று தனது தலைமையுரையில் குறிப்பிட்டார். அத்துடன் "போர் நிறுத்தக் கோரிக்கையை ஈழ மக்கள் எதிர்த்துள்ளனர். பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகள் ஏற்கப்படமாட்டாது, அப்படி ஏற்கப்படும் தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்பதற்கு அத்தாட்சியாக இயக்கங்களின் சார்பில் வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன" — என்றும் அவர் கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் பொன்.தியாகராஜா உரையாற்றும் போது "சிறீலங்கா அரசு பாசிசப் போக்கினைச் செய்கிறது. ஆதலால், அரசு பாசிசமாகவே இயங்குகின்றது" என்று சுட்டிக் காட்டினார். அத்தோடு அவர் வெலிக்கடைச் சிறையில் ஈழப் போராளிகள் எவ்வாறு கொடூரமாகச் சித்திரவதைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர் என்பதையும் விபரித்தார்.

"பயங்கரவாதப் பிரச்சினைகள் பொதுவாக தப்பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டன" எனச் சொன்னார் தோழர். சி.கு. சபேசராசா. அவர் தொடர்ந்து உரையாற்றும் போது - "தற் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை பயங்கர வாதம் என்று கூறமுடியாது. அது புரட்சிகர பலாத்காரமாகும். அமெரிக்காவின் தேவையைப் பூர்த்தி செய்யும் இஸ்ரேலின் நடவடிக்கைகள் அனைத்தும் - குறிப்பாக அரபாது நில ஆக்கிர மிப்பு சர்வதேசப் பயங்கரவாதத்தின் அம்சமாகும்" என்றார். ஏகாதிபத்திய நாடுகள் கூடி சர்வதேச ரீதியாக, முன் கூட்டியே தூண்டிவிடப்பட்ட பிரச்சினைகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"அமெரிக்க அரசின் இன அழிப்புத் தன்மைகளையே சிறிலங்கா அரசு இன்று பின்பற்றிக் கொண்டிருக்கிறது" - எனக் குறிப்பிட்டார் தோழர் உமாகாந்தன். "அமெரிக்காவின் ஆதிக்குடி யினரான செவ்விந்தியர் திட்டமிடப்பட்ட முறை யில் அழிக்கப்பட்டனர். அத்தோடு மற்றைய அமெரி க்காவிலுள்ள அமெரிக்கக் கைக்கூலியரசுகளால் அவ்வினம் இன்றும் அழிக்கப்பட்டு வருகிறது - இந்தப் பாணிதான் இலங்கையிலும் ஜெயவர்த்தன அரசினால் பின்பற்றப்பட்டு வருகிறது. இனப்பிரச்சினை களின் தோற்றத்திற்குக் காரணம் வர்க்க, பொரு ளியல் பிரச்சினைகள்தான்" என்று கூறிய அவர் பாலஸ்தீன, தென்னாபிரிக்க கறுப்பு இன - மக்களுக் கு இழைக்கப்படும் கொடுமைகளையும் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் நாம் உண்மையை மறக்கக் கூடாது.

“நாட்டுக்கு வெளியே இருக்கின்றவர்களும் அமைப்புக்களும் தாயகத்தை நோக்கித் திரும்ப வேண்டும். தாயகத்தின் ஒரு பகுதியையாவது விடுவித்து வைத்துக் கொண்டு எமது போராட்டத்தை நடத்தாவிட்டால், நாடு விடுதலை சாத்தியமாகாது” என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

“இருபதுக்கும் மேற்பட்ட விடுதலை அமைப்புக்கள் எம்மிடையே இருக்கின்றன. ஆனால், அவற்றின் போராட்ட அணுகுமுறைகளில் வித்தியாசம் காணப்படுகின்றன.” எனச் சுட்டிக் காட்டிய தோழர் பெ.ம. இன்பநாயகம் - “போராட்ட ஐக்கிய அழிக்க முடியாத ஒன்று. ஆனால் கிளைக்கு ஒத்து வராத இயக்கங்கள் அழிந்து போகக்கூடிய தன்மை கொண்டவை” என்றார்.

கூட்ட முடிவில் தோழர் அந்தோனிப்பிள்ளை நன்றியுரையாற்றினார்.

- கே.கே. மோகன்.

---

**தோழர்களே!**

'தமிழ் முரசு'டன் இணைந்து தொடர்புகளுக்கு . . . .

THE EDITOR
TAMIL EELAM LIBARATION COUNCIL (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.
FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிவரை போராடுவோம்

— தோழர் பத்மநாபா —



என்னுயிரினும் மேலான ஈழ மக்களே,

பசி, பட்டினி, பணமின்மை, அகதிகளாக்கப்படுகின்றமை, உயிர் உடமைகள் இழப்புக்கு உள்ளாக்கப்படுகின்றமை என்பவற்றை நாம் ஒரு போராட்டத்தில் அனுபவிக்க வேண்டியது தவிர்க்க முடியாததுதான்.

ஆனால் நானோ, எனது தோழர்களோ மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை. மக்களுக்காகத் தான் மண்ணை நேசிக்கின்றோம்.

நீண்ட எங்கள் நெடும் பயணத்தில் நீங்களும் எங்களுடன் தொடர்ந்தும் வந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நானும், எனது தோழர்களும், எங்களின் சகோதர அமைப்புக்களும் இணைந்து இந்த இடைவேளையைத் தயார் செய்தோம்.



இந்த இடைவேளையை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். மீண்டும் இடைவேளை எப்போது வருமென கூற முடியாது. இடையில் மீண்டும் ஓய்வு எடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம்.

ஆனால் எமது இலக்கை நாம் அடையும் வரை எமது பயணம் முடியப் போவது இல்லை.

ஆனால் இதே வேளையில் நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டிய ஒரு விடயத்தையும் கூற வேண்டியவனாக இருக்கின்றேன்.

அஃது என்னவெனில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதிகளும், உளவாளிகளும் உங்களுக்கு இடையில் பல்வேறு வடிவங்களில் ஊடுருவுவார்கள்.

உங்களோடு சிநேக பூர்வமானவர்கள் போல் நடித்து எங்களைப் பற்றிய செய்திகளை சேகரிப்பதற்கு முயற்சிப்பார்கள்.

உங்கள் மத்தியில் பிச்சைக்காரர்கள் போலவும், பைத்தியக்காரர்கள் போலவும், நாடோடி வியாபாரிகள் போலவும் நடமாடுவார்கள்.

உங்களுக்கு இடையே இருந்து எங்களைக் காட்டிக் கொடுப்பதற்கான நோக்கத் துரோகிகளை தயார் செய்து கொள்ள முயற்சிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நீங்கள் இடைக்கால ஓய்வை எடுத்துக் கொள்ளும் இந்த நேரத்தில் எதிரிகளைப் பற்றி மிகவும் விழிப்பாகவும், உசாராகவும் இருந்து கொள்ளுங்கள்.

இந்த எதிரிகள்தான் கடந்த ஆண்டுகளில் 5,000 க்கு மேற்பட்ட எங்கள் சகோதரர்களைக் கொலை செய்தவர்கள்.

இவர்கள்தான் நூற்றுக்கணக்கான எங்கள் சகோதரிகளைக் கற்பழித்தவர்கள்.

---

இதே நபர்கள்தான் பல கோடி பெறுமதி வாய்ந்த எமது பொருட்களைக் கொள்ளையடித்து கொண்டு சென்றவர்கள்.

இவர்கள் இப்போது எம்மோடு நண்பர்களாக நடிக்க முற்படுவதெல்லாம் மீண்டும் எம்மைக் கொலை செய்வதற்காகவே, எமது உடமைகளைக் கொள்ளை அடிப்பதற்காகவே என்பதை எந்தக் கண நேரத்திலும் நீங்கள் மறந்து விடாதீர்கள்.

இக்கால இடைவெளியில் எதிரிகள் என்னென்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள் என நீங்கள் அறிவதை எமது அமைப்பின் தோழர்களிடமோ அல்லது எமது சகோதர அமைப்புக்களின் தோழர்களிடமோ உடனுக்குடன் தவறாது தெரிவித்துக் கொண்டிருங்கள்.

ஏனெனில் எமது போராட்டப் பயணம் மீண்டும் தொடரப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இவ்வளவு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் பின்னர் எமக்கு இடைவேளை தேவைதானா? என்று நீங்கள் கேட்கலாம்.

நான் உங்களுக்கு கூறுவது என்னவெனில், எமது சுதந்திரத்தை நாம் அடையும் வரை, சமாதானமாக வாழுகின்ற நிலையை நாம் எட்டும் வரை, எமது ஜனநாயக உரிமைகளையும், கௌரவத்தையும் நாம் நிலைநாட்டும் வரை எமது போராட்டம் முடிவடையப் போவதில்லை.

ஆனால் எமது போராட்டம் ஒரு நீண்ட காலப் போராட்டமாக அமைய வேண்டியது எம்மால் தவிர்க்க முடியாததாக இருக்கின்ற காரணத்தால் போராட்டம்-இடைவேளை-மீண்டும் போராட்டம் என்கின்ற செயல்முறையை நாம் கடைப்பிடிப்பதே எமது இலக்கை நாம் தவறாது அடைவதற்கான சரியான வழிமுறையாகும்.

நீங்கள் எங்களோடு தொடர்ந்தும் இந்தப் போராட்டப் பயணத்தில் வந்து கொண்டு இருப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தடையும், எந்தப் பின்வாங்கல்களும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே உங்களுக்கான இந்த இடைவேளையை நான் தெரிவு செய்து கொண்டேன்.

என் உள்ளம் நிறைந்த எத்தனையோ தோழர்களை நான் கடந்து வந்த பாதைகளில் இழந்து விட்டேன். ஆனாலும் அவர்கள் மக்களுக்காக மடிந்த மாவீரர்கள் என என் மனதை இரும்பாக்கிக் கொண்டுதான் இந்த தீர்மானத்திற்கு வந்தேன்.

5,000-க்கும் மேற்பட்ட ஈழ மக்கள் சிங்கள இன வெறி பிடித்த கொடிய மிருகங்களால் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் உறுதி குலையாது இன்றைய காலகட்டத்தின் தேவையை உணர்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியவனானேன்.

எனினும், இவ்வாறான இழப்புக்களை இதுவரை எதற்காக நாம் கொடுத்தோமோ அந்த நோக்கத்தினை அடைகின்ற வரை மனம் தளராது, உறுதி குலையாது வெற்றி வரை போராடுவோம்.

"ஐக்கியமே எமக்கு இன்று முக்கியம்."
"வாழ்க ஈழத் தேசிய விடுதலை முன்னணி."
"இறுதி வெற்றி ஈழ மக்களுக்கே."
"வெல்க ஈழ விடுதலைப் போராட்டம்."
"வாழ்க ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி."

இப்படிக்கு
உங்கள் தோழன்
**க. பத்மநாபா**

செயலாளர் நாயகம்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

தோழர்களே!

"போர் நிறுத்தமும் - பேச்சுவார்த்தையும்"
"எரிமலையின் - விளிம்பில்"
ஆகிய புதிய, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெளியீடுகளைப் பெற EPIC பிரான்சுக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மக்கள் இராணுவம்

## வியட்நாம், ஈரான், நிக்கரகுவா வரிசையில் அடுத்து

## பிலிப்பைன்ஸ்

வா. மகாதேவா.



வரலாற்றுச் சுருக்கம்:

* 1571 .ல் ஸ்பானியர்கள் மணிலா நகரில் காலடி வைத்தனர். இதைத் தொடர்ந்து இந்தத் தீவுகள் ஸ்பானிய மன்னனை PHILIP II என்பவரின் பெயரால் பிலிப்பைன்ஸ் என வழங்கலாயிற்று.

* ஸ்பானிய–அமெரிக்கப் போரைத் தொடர்ந்து 1898ல் 20 மில்லியனுக்கு ஸ்பெயினிடமிருந்து அமெரிக்கா பிலிப்பைன்சை விலைக்கு வாங்கிக் கொண்டது.

* 1899–1905வரை ஸ்பானிய மக்கள் கொரில்லா யுத்தத்தில் ஈடுபட்டனர் இது அமெரிக்கத் துருப்புகளால் ஒடுக்கப்பட்டது.

* டிசம்பர் 8ம் திகதி 1941ல் யப்பானியர் பிலிப்பைன்சைத் தாக்கினர். 2 ஆவது உலகப் போரில் யப்பானிய காலனி ஆக பிலிப்பைன்ஸ் இருந்தது.

* யூலை 4ம் திகதி 1946ல் பிலிப்பைன்ஸ் சுதந்திரம் பெற்றது ( 2ஆவது உலகப் போரின் பின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சோசலிச சிந்தனை வாதிகளாக HUK கொரில்லாக்களின் போராட்டம் 1954ல் பிலிப்பைன்ஸ் ஆட்சியாளர்களால் தோற்கடிக்கப்பட்டது.

* அமெரிக்க ஏகாதிபத்தியமும் பிலிப்பைன்சும் பரஸ்பர தற்காப்பு ஒப்பந்தம் (MUTUAL DEFENCE TREATY) ஒன்றைச் செய்து கொண்டன.

* 1966 ஆம் ஆண்டு அமெரிக்க கடற்படை இராணுவ தளங்களுக்கான குத்தகை 25 வருடங்கள் என நிர்ணயிக்கப்பட்டது

* 1970களில் கிராமிய கொரில்லாத் தாக்குதல்கள் தீவிரம் அடைந்ததால் செப்டெம்பர் 21ம் திகதி 1972ல் மார்க்கோஸ் அரசாங்கம் இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது.

* ஜனவரி 17ம் திகதி 1973 மார்க்கோஸ் அரசு புதிய அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தது. இதில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியாக மார்க்கோஸ் பதவியேற்றார் இவரது மனைவியான இமெல்டா மார்க்கோஸ்

சட்டரீதியாக அதிகாரங்களைக் கொண்டுவரும் திட்டமிடும் பொறுப்பானவருமாக மாஸ்கோஸ் நியமிக்கப்பட்டார்.

* ஜனவரி 17ம் திகதி 1981ல் இராணுவச் சட்டத்தை இரத்துச் செய்த மார்க்கோஸ் அரசாங்கம் கண்துடைப்புத் தேர்தல் ஒன்றை நடாத்தியது. இதில் அந்த ஆறு ஆண்டுகளுக்கு மார்க்கோஸ் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்

* முழு ஜனத்தொகையின் 5% மக்கள் முஸ்லீம்களாவர். இவர்கள் மோரோக்கள் என அழைக்கப்படுகின்றனர். பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து பிலிப்பைன்சின் தெற்குப் பகுதிகளில் ஆயுதமேந்திப் போராடும் மோரோ தேசிய விடுதலை இயக்கத்தினர் பிலிப்பைன்சின் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தைத் பரந்த அளவில் முன்னெடுத்துச் செல்லும் புதிய மக்கள் இராணுவத்திற்கு (NPA) தோழமை சக்தியாவார்

அரசாங்கத்திடமிருந்து கைப்பற்றிய இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய 16 வகை நவீன வகை இயந்திரத் துப்பாக்கிகளையும் தெரிண்ட 20000 முற்போக்குச் சிந்தனைவாதிகள் புதி மக்கள் இராணுவத்தின் (NEW PEOPLES ARMY) புரட்சிகர நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்பைன்ஸின் கரையோரப் பகுதிகளிலும் காட்டுப்
பிரதேசங்களிலும் கிராமங்களிலும் கடந்த காலங்களில் வேரூன்றி இருந்த இந்தப் புரட்சியாளர்கள் படிப்படியாக நகரங்களை நோக்கி நகர்ந்து வருகின்றனர். தனிப்பட்ட விவசாயிகள் மத்தியிலும் கூலித்தொழிலாளர் கிராமிய மக்கள் மத்தியிலும் வேர்விட்டிருந்த புதிய மக்கள் இராணுவம் நகரப்புறங்களிலுள்ள நடுத்தர வர்க்கத்தினரை இந்தப் புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபடுத்தி வருவதையே இன்று காணக்கூடியதாக இருக்கின்றது.

தனது அரசியல் எதிரியான BENIGNO AQUINOவை கொலை செய்வதன் மூலம் தனது ஆட்சிக்கு பாதகமேற்படாது தடுத்துவிட மார்க்கோஸ் கணக்கிட்டிருந்தார். ஆனால் மார்க்கோஸ் அரசு AQUINOவை கொலைசெய்ததைத் தொடர்ந்து பிலிப்பைன்சில் நடுத்தர வர்க்கம் கொதிப்புற்றது. நடுத்தர வர்க்கத்தை வழிநடத்திச் செல்லும் குட்டி முதலாளித்துவ தலைமைகள் AQUINO வின் கொலையின் பின்னரும் ஆயுமேந்தத் தவறவே நடுத்தர வர்க்கம் புதிய மக்கள் இராணுவத்தின் மேல் சாயத் தொடங்கினர்..

---

இது நாள் வரை கிராமங்களில் தளமமைத்துச் செயற்பட்ட கொறில்லாக்கள் தற்சமயம் அமரிக்கத் துருப்புக்கள் தளம் அமைத்துள்ள SUBIC குடா CLARK FIELD போன்ற இடங்களை அண்மித்து விட்டனர்

இது பற்றி அமரிக்காவின் துணைப் பாதுகாப்பு அமைச்சரான RICHARD ARMITERGE ஒரு எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டார். 3தொடக்கம் 4 வருடங்களினுள் புதிய மக்கள் இராணுவம் (NPA பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் நிர்ணயகரமான போரை நடத்தும் என்பதுவே அமரிக்க அரச வட்டாரங்களைச்சேர்ந்தவரது எச்சரிக்கையாகும்.

7,100 தீவுகளைக் கொண்ட பிலிப்பைன்ஸ் 73 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 59 மாகாணங்களில் புதிய மக்கள் இராணுவம் மக்களிடையே மிகுந்த ஆதரவைப் பெற்று வருகிறது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEGROS எனப்படும் இடத்தில் இது நாள் வரை புதிய மக்கள் இராணுவத்திற்கு பெரியமட்ட செல்வாக்கு இருக்கவில்லை ஏப்ரல் மாதம் 85ம் ஆண்டு 150000கரும்புத் தொழிலாளர்கள் வேலையில்லாது போகவே இன்று புதிய மக்கள் இராணுவத்தின் செல்வாக்கு NEGROS மாறிவிட்டது. இதைவிட மேலும் 100,000பேரை வேலையிலிருந்து நிறுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க தரப்பில் இதுவரை இல்லாத அளவு இராணுவத்தினுள் ஒழுக்கமின்மை நிலவுகின்றது. லஞ்சத்திற்கும் ஊழலுக்கும் பெயர் பெற்ற பிலிப்பைன்சு இராணுவம் தமக்குக் கிடைக்கும் சம்பளத்தைப் பற்றி பெரிய அளவில் குறைபட்டுக் கொள்கின்றனர். இராணுவத்தினர் தலா $ 55 க்கும் குறைவாகவே பெற்றுக் கொள்கின்றனர்.

இராணுவத்திலிருந்து (ஓய்வுபெறும் சிப்பாய் அனேகமாக தன்னிடமிருந்து துவக்குத் தொலைந்து விட்டதாகக் கூறிவிட்டு அவற்றைப் புதிய மக்கள் இராணுவத்திற்கு விலைக்கு விற்று வருகின்றான்.

பிலிப்பைன்ஸ் இராணுவத்தைப் பலமுள்ளதாக்க் 1986 நிதியாண்டில் நூறு மில்லியன் டொலர்களை பிலிப்பைன்சுக்கு கொடுக்க றேகன் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. ஈரானில் உஷாவினுடைய ஆட்சி தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்கிழக்கு தெற்கு ஆசியாவில் அமரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ நலன்கள் பெரிய மட்ட பின்னடைவை அடைந்தன.

பிலிப்பைன்சில் புதிய மக்கள் இராணுவம் புரட்சி செய்யுமேயானால் பிலிப்பைன்சிலுள்ள தமது தளங்களை அமரிக்கா தென்கிழக்காசியாவில் வேறு இடங்களுக்கு நகர்த்த வேண்டி ஏற்படும். தமது இராணுவ நலன்களைப் பாதுகாக்க வேண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டுமானால் புதிய மக்கள் இராணுவத்தின் புரட்சிகர நடவடிக்கைகளை நசுக்க பிலிப்பைன்சு இராணுவத்தை உளவியல் சடத்துவ ரீதியில் மீளக்கட்டி எழுப்பியாகவேண்டிய பணியில் அமரிக்க ஏகாதிபத்தியம் ஈடுபட்டுள்ளது. இதே பொழுதில் பிலிப்பைன்சுக்கான பொருளாதார உதவியை 95டொலர் மில்லியனிலிருந்து 155 டொலர் மில்லியனுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் உயர்த்தியுள்ளது.

புதிய மக்கள் இராணுவத்தினாலும் கம்யூனிஸ்ட்டு கட்சி முற்போக்கு கட்சிகளினாலும் மார்க்கோஸ் அரசுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள இந்த ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் விடுதலை போரில் மார்க்கோஸ் அரசாங்கம் தோல்வி அடைய நேரிடுமானால் சில வேளைகளில் அமரிக்க மூலதனங்களையும் அமரிக்க மக்களையும் அமரிக்கத் துருப்புக்களையும் காப்பாற்ற என்ற சாக்கில் அமரிக்கா புதிய மக்கள் இராணுவத்துடன் மோத உள்ளிடலாமென பிலிப்பைன்சு மக்கள் கருதுகின்றனர்.

சர்வதேசரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் உலகின் அனைத்து முனைகளிலும் ஏகாதிபத்திய-முதலாளித்துவ எதிர்ப்புப் போர்களில் ஈடுபட்டு வருவதையே நாம் இன்று காணக்கூடியதாக உள்ளது. கடந்த தசாப்தத்தில் மிகவலிமை மிக்க வியட்நாம், ஈரான், நிக்கரகுவா புரட்சிகளின் பின்னர் அடுத்து வருவது பிலிப்பைன்சு என்றே சர்வதேச முற்போக்குச் சக்திகள் கருதுகின்றன.

---

தோழர்களே! ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) தரும் ஈழச்செய்திகளை தொலைபேசி மூலம் அறிவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் – 874-60-48.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## பிரான்சு:

"தேசிய மன்றத் தேர்தல்களில் சோசலிசக்கட்சி தோல்வியடைந்தாலும் தொடர்ந்து பதவியில் இருப்பேன்" - பிரெஞ்சு ஜனாதிபதி அறிவிப்பு.

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தல்களில் பிரான்சின் ஆளும் சோசலிசக் கட்சி தோல்வியடையலாம் என்ற கருத்தை முதல் தடவையாக பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்சுவா மித்திரன் தெரிவித்துள்ளார். அதேவேளையில் எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியடைந்தாலும் கூட தாம் தமது பதவிக்காலமாகிய 1988ம் ஆண்டிற்கு முன்னர் பதவியிலிருந்து விலகப் போவதில்லை எனவும் அவர் உறுதியாகக் கூறியுள்ளார். தற்போதுள்ள பாராளுமன்றத்தின் 491 ஆசனங்களில் 285 ஆசனங்களைத் தம்வசம் வைத்திருக்கும் சோசலிசக் கட்சி எதிர்வரும் தேர்தலில் ஏறத்தாழ 100 ஆசனங்களை இழக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும் சோசலிசக் கட்சியின் இறுக்கமான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவால் ஏற்பட்டுவரும் பொருளியல் சாதக நிலைமை, வலதுசாரி எதிர்க்கட்சிகளின் அரசியல், பொருளாதாரத் திட்டமற்ற தன்மை, அவற்றினிடையேயுள்ள ஒற்றுமையற்ற நிலை ஆகியவை 1988 ஜனாதிபதித்தேர்தலில் மீண்டும் சோசலிசக் கட்சிக்கே வெற்றியைத் தேடித் தரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்காவில் புதிய முதலீடுகளை பிரான்சு நிறுத்தியது.

கறுப்பு இன மக்களுக்கு எதிராக தொடரும் தென்னாபிரிக்க அரசின் இனவெறிக் கொள்கையினை கண்டிக்கும் வகையில் தென்னாபிரிக்காவிலான தனது புதிய முதலீடுகளை நிறுத்துவதாக பிரெஞ்சு அரசு அறிவித்துள்ளது. அதேசமயம் ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தென்னாபிரிக்க அரசின் இனவெறிக் கொள்கைக்கெதிரான கண்டனத் தீர்மானமொன்றையும் பிரான்சு கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. சோவியத் யூனியன் மற்றும் சோசலிச நாடுகள், மூன்றாவது உலகநாடுகளின் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இக்கண்டனத் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பில் தென்னாபிரிக்க இனவெறியரசின் ஆதரவாளர்களான அமெரிக்காவும், பிரித்தானியாவும் பங்கு பற்றவில்லை. இருந்தபோதிலும் முதல் தடவையாக இவ்விரு நாடுகளும் தென்னாபிரிக்காவுக்கெதிரான தீர்மானத்திற்கெதிராக தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தாது விட்டது குறிப்பிடத்தக்கது.

**இஸ்ரேல்!**

## பொருளாதார நெருக்கடியில் இஸ்ரேல்.

தன்னுடைய இராணுவ வல்லமை மூலம் மத்திய கிழக்கில் ஆளுமை செலுத்த முயலும் சியோனிச இஸ்ரேல் அரசு மீளமுடியாத பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. சமீபத்திய அமைச்சரவை முடிவின்படி இஸ்ரேலிய நாணயமான ஷெக்கல் 18.8% ஆல் பெறுமதிக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி அரசசேவையாளரின் ஊதியம் 3% ஆல் குறைக்கப்பட்டுள்ளதுடன் 9000 பேர் பதவி நீக்கமும் செய்யப்பட்டுள்ளனர். அரசின் இந்நடவடிக்கைகளுக்கெதிரான தொழிலாளர் போராட்டங்கள் கிளம்பியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் யூனியன்'.

## சோவியத் அரசியலில் புதிய மாற்றங்கள்.



Camera Press

**Mikhail S. Gorbachev**

சோவியத் யூனியனின் அரச உயர்பதவிகளில் பல புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கடந்த 28 வருடகாலங்களாக சோவியத் யூனியனின் வெளிநாட்டமைச்சராக பதவிவகித்துவந்த அன்றி குரோமிக்கோ சோவியத் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளையில் புதிய வெளிநாட்டமைச்சராக ஜோர்ஜியா குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான ஷெவர்ட்நாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். தமக்கு முன் பதவிவகித்த மூன்று தலைவர்களைப் போலன்றி சோவியத் தலைவரான கோர்பாச்சேவ் ஜனாதிபதிப் பதவியை தாம் ஏற்காது குரோமிக்கோவுக்குக் கொடுத்ததும், தொடர்ச்சியாக மக்களோடும், தொழிலாளர்களோடும் கலந்துரையாடி மாற்றங்களை மேற்கொண்டுவரும் தன்மையும், ஊழல், ஊக்கமின்மை இவற்றிற்கெதிரான கோர்பச்சேவின் கோஷங்களும் சோவியத் மக்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேசமயம் இவ்வருட இறுதிப்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதியுடனும் அதற்கு முன்னதாக பிரெஞ்சு ஜனாதிபதியுடனுமான உச்சிமாநாடுகளை கோர்பச்சேவ் நடத்தப்போவது பற்றிய அறிவித்தல்களை சோவியத் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. சோவியத் தலைவரின் புதிய கையாள்கைமுறைகள் சோவியத் மக்களின் பேராதரவை அவருக்கு அளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா:



### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொடரும் நீசத்தனங்கள்.

இலட்சக்கணக்கான மக்களின் இரத்தத்தில் தனது கைகளை நனைத்துக்கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் புரட்சிகர மற்றும் முற்போக்கு அரசுகளுக்கெதிரான தனது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளைப் பாரிய அளவில் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ஏற்கனவே நிக்கரகுவா, ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா ஆகிய நாடுகளின் முற்போக்கு அரசுகளைக் கவிழ்க்க முனைந்துவரும் சதியாளருக்கு நிதியளித்துவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்போது அங்கோலாவின் முற்போக்கரசைக் கவிழ்க்கும் சதிக்கும் நிதியளிக்கும் தீர்மானத்தை காங்கிரசில் நிறைவேற்றியுள்ளது.

## நிக்கரகுவா:

### நிக்கரகுவாவில் மாபெரும் மக்கள் எழுச்சி.

நிக்கரகுவா புரட்சியின் ஆறாவது ஆண்டு வைபவத்தில் வரலாற்றில் இல்லாதவகையில் 5இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெரும் எழுச்சியுடன் கலந்துகொண்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கெதிராக பொங்கியெழுந்த இம்மக்கள் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி டானியல் ஒட்டேகா அமெரிக்கா இராணுவரீதியில் நிக்கரகுவாவினுள் தலையிடுமேயானால் அது மத்திய அமெரிக்கா முழுவதிலுமே பெரும் யுத்தத்தை தோன்றச் செய்யும் என்று குறிப்பிட்டார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா:

### "அமெரிக்காவில் பயங்கரவாதிகளைப் பயிற்றுவிக்கும் முகாம்கள்; ஆதாரம் உண்டு"... ராஜிவ்

அமெரிக்காவில் பயங்கரவாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் முகாம்கள் தொடர்பான சகல விவகாரங்களையும் பகிரங்கப்படுத்தக்கூடிய வீடியோ பதிவு நாடாக்கள் தம் கைவசம் உள்ளதாக இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கூறியுள்ளார். றேகன் நிர்வாகத்தின் ஆசீர்வாதத்துடன்தான் இந்த பயங்கரவாதிகளைப் பயிற்றுவிக்கும் முகாம்களும், பாடசாலைகளும் நடத்தப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில் அமெரிக்காவின் அலபாமா மாநிலத்திலுள்ள மேற்படி முகாம்களையோ, பாடசாலைகளையோ மூடிவிடும் நோக்கம் அமெரிக்க அரசுக்கு இல்லை என அமெரிக்க நீதியமைச்சு தெரிவித்துள்ளது. ராஜிவ் கொலை முயற்சி தொடர்பாக தேடப்படும் லால் சிங், அமாண் சிங் இருவரும் இங்கு பயிற்சி பெற்றவர்களே. இது இவ்வாறிருக்க சீக்கியர் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் சீக்கிய மிதவாதத் தலைவரான லோங்கோவாலுடன் இந்தியப் பிரதமர் ராஜிவ் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தியுள்ளார்.

### "சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கும் தீர்வு எதனையும் ஏற்கமுடியாது" - ராஜிவ்.

"இலங்கைத் தமிழர்களின் சுதந்திரத்தை விட்டுக்கொடுத்துப் பெறப்படும் எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ள முடியாது. உரிமைகளுடனும், அமைதியாகவும் இலங்கைத் தமிழர்கள் வாழ வேண்டும். அத்தகையதொரு தீர்வு ஏற்படுவதனையே இந்தியா விரும்புகிறது" இவ்வாறு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய தேசிய முதலாளித்துவ அரசின் முகமூடி கிழிகிறது!

# பாலஸ்தீன மக்களின் வீரமிக்க போராட்டம் வெற்றி பெறும்

தங்களை முற்போக்குச் சக்திகளாகக் காட்டி முலாம் பூசிக்கொண்ட நாடுகள் பலவற்றின் முகமூடிகள் கிழிய ஆரம்பித்துள்ள காலமிது. அந்த வரிசையில் சிரிய தேசிய முதலாளித்துவ அரசின் சுயரூபமும் அம்பலத்துக்கு வர ஆரம்பித்துள்ளது. பாலஸ்தீன மக்களின் வீரமிகு போராட்டத்தை நசுக்குவதற்கு சிரிய அரசு மேற்கொண்ட சதிகள் பகிரங்கப்படுத்தப்பட்டு வருகின்றன.

லெபனானுக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்த மூன்றுவது நாள் லெபனான் மக்களைக் 'காப்பாற்றுவதற்காக' லெபனானில் நிறுத்தப்பட்டிருந்த சிரியப் படைகள் தமக்கு ஏற்பட்ட இராணுவத் தோல்வியிலிருந்து தப்புவதற்காக லெபனானை விட்டுப் பின்வாங்கின. சியோனிசப் படைகளுக்கு எதிராக வீரமிகு போராட்டத்தை நடத்திய பாலஸ்தீன, இலெபனான் முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராகப் போராட மறுத்தன. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் பாலஸ்தீன மக்களுக்கும் இலெபனான் மக்களுக்கும் ஏற்பட்ட மொத்த இழப்புக்களுக்குமான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டிய சிரிய அரசு இன்று லெபனானிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறியதற்குத் தானே காரணம் என்று பச்சையாய்ப் பொய் கூறி வெற்றி மாலையை தன் கழுத்தில் போட்டுக்கொள்ள முன்வந்திருக்கிறது.

1982 செப்டெம்பரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினலும் அதனுடைய கூட்டாளியான இஸ்ரேலிய அரசினாலும் லெபனானில் அமின்கெமாலின் தலைமையிலான ஒரு கைப்பொம்மை அரசு உருவாக்கப்பட்டது. அன்று இந்த அமின்கெமால் இஸ்ரேலின் அடிவருடியாக இருந்தபோது அவரை எதிர்த்த சிரிய அரசு அதே அமின்கெமால் தனது பதவியைக் காப்பாற்றுவதற்காக சிரியத் தலைவர் அசாத்தின் காலடிகளில் வீழ்ந்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கரங்களில் படிந்துள்ள பாலஸ்தீன இலெபனன் மக்களின் இரத்தக்கறைகளை மறைத்து அவரது பதவியைக் காப்பாற்ற காபந்து அரங்களை ஒழுங்கு செய்த சிரிய அரசின் துரோகத் தனத்தை மக்கள் மறக்க முடியுமா.

லெபனனுக்குள் இஸ்ரேல் நுழைந்ததன் முக்கிய நோக்கமே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழிப்பதற்காகத் தான் என்பது அனைவரும் அறிந்ததே. 1974ம் ஆண்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் கிடைத்த வரவேற்பும், அதைத் தொடர்ந்து உலக அரங்கில் பாலஸ்தீன இயக்கம் மேற்கொண்ட அரசியல் வேலைகளும் இஸ்ரேலுக்குப் பேரிடியைக் கொடுத்தன. சர்வதேச அரங்கில் இஸ்ரேலின் சுயரூபத்தை அம்பலப்படுத்தின – விளைவு பல நாடுகள் இஸ்ரேலுடனை தொடர்புகளை அறுத்துக் கொண்டன. இந்தக் கட்டத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இயக்கக் கட்டமைப்பும், இராணுவத் தகைமையும் சீர்குலைப்பதன் மூலம்...தான் வலுப்பெற முடியும் என்பதையும் இதற்கான கேந்திர ஸ்தானம் லெபனனே என்பதனையும் இஸ்ரேல் புரிந்துகொண்டு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழிக்கும் தனது முயற்சிகளை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் லெபனனில் ஆரம்பித்தது.

மூன்று வருடங்கள் கழிந்தபின்னர் இன்று நிலை என்ன? இஸ்ரேலின் கனவு பலித்ததா? உலகின் சக்திவாய்ந்த இராணுவ அமைப்புகளிலே ஒன்றும் அதி சக்தி கொண்ட நவீனகர போர்க் கருவிகளைக் கொண்டதுமான இஸ்ரேல் இராணுவத்திற்கெதிரான மூன்று மாத கடும் போராட்டத்தின் பின்னர் யசீர் அரபாத்தின் தலைமையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் 1982ஆகஸ்ட் 21 இல் பெய்ரூத்தை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆனல் அதன்பின்னர் அல்ஜியர்சில் நடைபெற்ற பாலஸ்தீன தேசிய சபைக் கூட்டம்இராணுவத் தகைமையிலே இயக்கம் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் உலக அரங்கில் தனது அரசியல் அந்தஸ்தை இழக்காதது நிரூபிக்கப்பட்டது

இ.ஸரேல் கற்றுக்கொண்ட பாடத்தை சிரியா உரைமறுத்தது. மாறாக இஸ்ரேலின் சதிகளை தான் வேறு வழிகளில் தொடர்ந்தது. சிரிய அரசு பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தி பாலஸ்தீன இயக்கத் தலைவர்களிடையே பொட்டியையும் பிரிவுகளையும் பேதங்களையும் ஏற்படுத்தியது. பாலஸ்தீன மக்களுக்கு சிரிய அரசு நிகழ்த்தி வந்த துரோகங்களின் உச்சக் கட்டமாக இஸ்ரேலிய வெறியர்களால் இரத்த வெறியாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தப்பட்ட பாலஸ்தீன அகதிகள் முகாம்களான சப்ரா, சதீலா, மற்றும் போர்ஜ்துல் பராஜீன் முகாம்களிலுள்ள பாலஸ்தீன அகதிகளை நிராயுத பாணிகளாக்கும் வகையிலும் அவர்களை லெபனானிலிருந்து அடித்து விரட்டி பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை நசிக்கும் வகையிலும் சிரியாவின் இன்றைய கைக்கூலியும் சியாத்-அமால் பிரிவின் தலைவருமான நபிபேரியின் தலைமையில் மீண்டும் ஒரு நரவேட்டை நிகழ்த்தப்பட்டது

வீரமிக்க பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் ஏற்கெனவே பல தடவைகள் குருதியில் குளித்தது எனவே தன்னுடைய இத்தகைய அடக்கு முறைகளின் மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்து லெபனானிலுள்ள 5 லட்சம் பாபாலஸ்தீன மக்களை விரட்டியடிக்க முனைந்துள்ள சிரிய அரசின் கனவுகளும் முறிந்து கொட்டப்பட ஆரம்பித்துள்ளன.

பாலஸ்தீன மக்களுக்கெதிரான படுகொலைகளை சிரியாவும் அமாலும் நியாயப்படுத்திய போதும் முற்போக்குச் சக்திகள் யாவும் வன்மையாகக் கண்டிக்க ஆரம்பித்துள்ளன. இதுவரை காலமும் சிரியாவுடன் உறவு பாராட்டிவந்த முற்போக்குத் தலைவர்களான நயீஃப் ஹவாத்மே (DFLP) ஜோர்ஜ் ஹபாஷ் ஆகியோர் சிரியாவிடமிருந்து விலக ஆரம்பித்து விட்டனர். அதுமாத்திரமல்ல லெபனானின் முற்போக்கு சோசலிசக் கட்சி (PSP) யின் தலைவர் வலிட் ஜம்பலாட் பாலஸ்தீன மக்களுக்கெதிரான படுகொலைகளில் பங்குகொள்ள மறுத்தது மாத்திரமின்றி பாலஸ்தீன மக்களைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்தியதும் குறிப்பிடத்தக்கது. கொஞ்சம் கொஞ்சமாக சிரியா தன்னுடைய நேச சக்திகளை இழந்துவரும் அதேவேளையில் எஞ்சியிருக்கும் அதன்கூலிக் கும்பலான அமால் படையினரும் பாலஸ்தீன மக்கள் பிரச்சனையில் பிளவுபட்டுள்ளனர். கெஸ்புல்லா எனப்படும் தற்கொலைப் படைப்பிரிவு இஸ்லாமிய ஐக்கியத்தின் பெயரால் பாலஸ்தீன மக்களுக்கெதிராக ஆயுதம் ஏந்த மறுத்துள்ளது. நபிபேரியின் தலைமையிலான அமாலும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள லெபனான் இராணுவத்தின் ஆறுவது பிரிவும் இணைந்து அப்பாவி பாலஸ்தீன மக்களுக்கெதிராக 23 நாட்களில் 50 தாக்குதல்களை நிகழ்த்தி பல நூறு அப்பாவி பாலஸ்தீன உயிர்களைப் பலிவாங்கி சியோனிஸ்டுகளுக்குத் தாம் சற்றும் சளைத்தவர்களல்ல என்பதை காட்டியுள்ளனர். சிரியாவின் நேச நாடுகளான லிபியா ஈரான் ஆகியவையும் இதர அரபு நாடுகளும் இப்படுகொலைகளை வன்மையாகக் கண்டித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக்கும் மேலாக சிரிய அரசுக்கு விழுந்த பேரிடியாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கெதிரான சிரியாவின் நீசச் செயல்களை வன்மையாகச் சாடி சோவியத் யூனியனின் அரச செய்திப் பீடங்களான டாஸ் பிரவ்தா ஆகியன கண்டனகட்டுரைகளை வெளியிட்டுள்ளன. அதேசமயம் சோவியத் யூனியனால் சிரியாவுக்கு வழங்கப்பட்ட அதி சக்தி வாய்ந்த வானப் பாதுகாப்பு ஏவுகணைகளையும் அவற்றை இயக்குவதற்காக அனுப்பப்பட்ட சோவியத் போர் நிபுணர்களையும் மீளப் பெறுவதென சோவியத் யூனியன் தீர்மானித்துள்ளதுடன் சிரியாவின் மீது தான் கொண்ட அதிருப்தியையும் தெரிவித்துள் உள்ளது.

முற்போக்குச் சக்திகளை இழந்து வரும் அதே வேளையில் சர்வதேசப் பயங்கரவாதியான றேகன் தனது 'உலகப் பயங்கரவாத கேந்திர தளங்கள்' பட்டியலிலிருந்து சிரியாவை நீக்கி சிரியத் தலைவர் அசாத்தை அரவணைக்க ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வீரமிக்க பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயன்றவர்கள் படித்த பாடத்தையே ஈழமக்களின் போராட்டத்தை நசுக்க முயல்பவர்களும் படிப்பார்கள் என்பதை வரலாறு காட்டும்.

இறுதி வெற்றிவரை ஈழ- பாலஸ்தீன மக்களின் போராட்டங்கள் தொடரும்.

---

தோழர்களே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் ஆகியவற்றின் பிரான்சுக் கிளையுடனான சகல தொடர்புகட்கும்....

EPIC (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டான் பேச்சுவார்த்தைகள் ஒரு நோக்கு

மீண்டும் ஒரு பேச்சுவார்த்தையா? ஈழமே முழங்க முழவு என்றன பின்னர் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக நடந்துவிட்ட துன்பியல் நிகழ்வுகளையும் எண்ணற்ற இழப்புக்களையும் சந்தித்த பின்னர் ஏற்கனவே சிங்கள, தமிழ் தலைவர்களால் எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளும் அவ்வப்போது இருந்த எதிர்க்கட்சியினரால் எதிர்க்கப்பட்டதன் காரணமாக அவைகளும் அர்த்தமற்றவைகளாகப் போனபின்னர் - இப்போது பூட்டானின் தலைநகரான திம்புவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் பலனளிக்குமா என்பது கேள்விக்குரியதே! ஆயினும் விடுதலைப் போராட்டத்தில் பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் தவிர்க்கமுடியாதவையே! இந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து சிறீலங்கா அரசு தன்னைப் பலப்படுத்திக்கொண்டாலும், உலக அனுதாபமும், அதன் அபிப்பிராயமும் எம் திசையில் ஈர்க்கப்படும் என்பதையும் அது நமக்கு சாதகமாக இருக்கும் என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

1948ம் ஆண்டில் இலங்கையானது சுதந்திரம்(?) பெற்றபின்னர் இன்று தொடர்ந்து விட்டெரியும் சிங்கள-தமிழ் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக அன்றைய சிங்கள, தமிழ் தலைவர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளில் முக்கியமானதாகவும், அதிகாரபரவலைக் கொண்டதுமான பண்டா-செல்வா ஒப்பந்தத்தைப்பற்றியும் அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தம்பற்றியும் சற்றுத் தெரிந்து வைத்துக்கொள்வது இன்றைய நிலைமையை விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டா - செல்வா ஒப்பந்தம்!

26 யூலை 1957ல் ஆண்டு ஆட்சியில் இருந்த பண்டாரநாயக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வொப்பந்தத்தில் வடமாகாணம் ஒரு மாகாணசபையாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது மூன்று மாவட்ட சபைகளாகவும் - இம்மாவட்டங்கள் விரும்பும் பட்சத்தில் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தது. பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் இந்த மாவட்ட சபைகளுக்கு - விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடி, வீடமைப்பு, சமூகசேவை, மின்சாரம், நீர்ப்பாசனம், வீதியமைப்புக்கள் ஆகியவற்றில் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம் ஆகியவற்றில் அதிகாரங்கள் இங்கு குறிக்கப்பட்டது கவனத்துக்குரியதாகும். 19.11.48ல் பறிக்கப்பட்ட மலையக மக்களின் உரிமை பற்றியும் ஆய்ந்து ஆவன செய்வதாக பண்டாரநாயக்கா உறுதியும் அளித்திருந்தார்.

ஆனால் களனியாத் தொகுதியில் திருமதி விமலா கன்னங்கராவால் தோற்கடிக்கப்பட்டிருந்த இன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன, இந்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து 4 ஒக்டோபர் 1957இல் மேற்கொண்ட பாதயாத்திரையின் காரணமாக - ஒப்பந்தம் சட்டமாக்கப்படுவது காலதாமதமாகியது. இதன்பின்னர் இவ்வொப்பந்தத்தை எதிர்த்து பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் சுகாதார அமைச்சர் ஆக இருந்த திருமதி. விமலா கன்னங்கரா புத்த பிக்குகளுடன் சேர்ந்து 9 ஏப்ரல் 1958ல் பிரதமர் இல்லத்தை நோக்கி மேற்கொண்ட ஊர்வலத்தைக் கண்டு பயந்துபோன பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை வாபஸ்பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டட்லி-செல்வா ஒப்பந்தம்!

1965 மார்ச் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து ஆட்சியில் ஏறியது. பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் கேட்கப்பட்ட மாகாண சபைகளையும் விட குறைந்ததான மாவட்டசபைகளை தமிழரசுக் கட்சியினர் டட்லி சேனநாயக்காவிடம் கேட்டிருந்தனர். மேலும் 1958 முதல் செயலற்றதாக உள்ள தமிழ்மொழி (விசேட சரத்து) இனை நடைமுறைப் படுத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக் கட்சியும், சமசமாஜிகளும், கம்யூனிஸ்டுகளும் இதனை எதிர்த்தனர். புத்த பிக்கு தலைமை தாங்கிவிட 5-ஜனவரி-1966 இல் ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர். ஊர்வலத்தில் சென்ற பிக்குகள் தமிழ்மக்களைத் தாக்கினர். கடைகள் மீது கல்லெறிந்தனர். கலவரத்தை அடக்க பொலிசார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் புத்த பிக்கு ஒருவர் இறந்தார். இதைத் தொடர்ந்து டட்லி சேனநாயக்கா தனது ஆலோசனைகளையும், வாக்குறுதிகளையும் மறந்தார்-செயல்படுத்த மறுத்தார். இப்படியாகவே இரண்டாவது ஒப்பந்தமும் கைவிடப்பட்டது.

1981ல் ஈழப்போராட்டத்தினை பின்னடைப் பதற்கான தந்திரத்துடன் ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட அதிகாரங்கள் எதுவுமற்ற அபிவிருத்திச் சபைகளையும் கூட்டணியினர் நம்பியிருந்தனர். அதன்பின்னர் 1983 இனப்படுகொலையின் பின்னர் ஈழவிடுதலை இயக்கங்களுக்கு இந்திய அரசில் கிட்டிய ஆதரவையும், ஈழமக்கள்பால் உலகு கொண்ட அனுதாபத்தையும் கண்டு ஜெயவர்த்தன தனது அரசியல் சாணக்கியத்தின் அடுத்த பிரயோகமாக சர்வகட்சி மாநாட்டை 21-டிசம்பர்-83ல் கூட்டினார். அங்கு அரசால் சமர்ப்பிக்கப்பட்ட மாநிலசபைகள் மற்றும் வெவ்வேறு சபைகள் பற்றிய ஆலோசனைகள் நீண்டகால இழுத்தடிப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 26 டிசம்பர் 1984ல் பேச்சுக்கள் எதுவும் இன்றியே கைவிடப்பட்டது.

இதுவே நாம் கண்ட கடந்தகால அனுபவங்களாகும். இதன்பின்னர் ஈழ விடுதலை இயக்கங்களின் தொடர்ந்த போராட்ட நடவடிக்கைகள், வெளிநாட்டுத்துறையினர் தலையிட்டமை, அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வடைந்து வாழ்க்கைச்செலவு சீர்குலைந்தமை – அநுராதபுரச் சம்பவத்தின் பின் சிங்களமக்களுக்கு அரசின்மீது ஏற்பட்ட நம்பிக்கையின்மை, இந்திய அரசின் தலையீடு எல்லாமே பூட்டான் பேச்சுவார்த்தையின் கால்கோளாக இருந்த காரணமாம். இந்த சமாதானத் தீர்வையே சிங்களமக்களும் விரும்பினார் என்பதை வழமைபோல எதிர்ப்பு நடவடிக்கைகள் இல்லாமையால் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

8 யூலை, 1985ல் பூட்டானின் தலைநகரான திம்புவில் ஆரம்பித்த இப்பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சியமைப்பு, ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி ஆகிய இயக்கப்பிரதிநிதிகளுடன் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளும் பங்குபற்றினார். ஆனால் சிறீலங்கா அரசின் சார்பில் அரசாங்கத்தைச் சார்ந்த எந்த பாராளுமன்ற அங்கத்தினரோ அன்றி மந்திரிமாரோ வந்து கொள்ளாமல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சகோதரர் H.W. ஜெயவர்த்தனவின் தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்றே வந்திருந்தது.

பேச்சுவார்த்தைகளின் இறுதி நாளன்று சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து விடுதலை இயக்கங்களினதும் கூட்டணியினதும் பிரதிநிதிகள் இணைந்து நாலு அம்சக் கோரிக்கையை சமர்ப்பித்து இவையே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படை வழிவகைகளை என்பதை வலியுறுத்தின. இதன் அடிப்படையில் அடுத்த பேச்சுவார்த்தை 12 ஆகஸ்ட்-1985 இல் அமைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். பின்வருவனவே அந்த நான்கு அம்சங்கள்.

1) தமிழ் மக்களை தனி இனமாக அங்கீகரித்தல்.

2) தமிழ் மக்களின் தாயகத்தின் இறைமையை அங்கீகரித்தல்.

3) தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது.

4) விரும்புகின்ற அனைவருக்கும் பிரஜாவுரிமையை வழங்கல்.

இதல் பேச்சுவார்த்தை தொடர்பாக மந்திரி சபைக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்த H.W. ஜெயவர்த்தனா - எந்த ஒரு இனத்தினையும் தனிமைப்படுத்தி அரசியல் தீர்வு காணமுடியாது எனக் கூறியுள்ளார். மேலும் ஈழப்பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றி விமர்சிக்கையில் முதல் இரண்டு கோரிக்கைகளும் ஐக்கிய தேசிய இனம் என்பதற்கு முரண்பாடாக உள்ளதாகவும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்பது தனிநாட்டை அங்கீகரிப்பதாக அர்த்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ள அவர் மலையகத் தமிழர்களைப் பற்றியோ, அல்லது இஸ்லாமிய மக்களைப் பற்றியோ பேச மேற்சொல்லப்பட்ட குழுக்களுக்கு உரிமை கிடையாது எனக் கூறி தனது சுயரூபத்தை தோலுரித்துக் காட்டியுள்ளார்.

இதற்கிடையில் இன்னுமொரு விடயமும் குறிப்பிடப்படவேண்டும். இப்பேச்சுவார்த்தையின் மூன்றாவது நாளான 14 டிசம்பர் 1984ல் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட மாவட்ட, மாகாண சபைகளின் நகல் சட்ட மூலமே H.W. ஜெயவர்த்தனவின் அரசின் ஆலோசனையாக சமர்ப்பிக்கப்பட்டது. ஏற்கனவே மிதவாத த.வி.கூட்டணியால் நிராகரிக்கப்பட்ட இவ்வாலோசனையை முற்றாக நிராகரித்த விடுதலை அமைப்புக்கள் சிறிலங்கா அரசின் சுயரூபத்தை பல வகைகளிலும் அம்பலப்படுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத் தீர்வு பலனளிக்காது என்று போர்நிறுத்தம் செய்து கொண்ட சிறீலங்கா அரச படைகள் அண்மையில் வடக்கு, கிழக்கில் நடத்திய வெறியாட்டங்கள் – பேச்சுவார்த்தையில் ஈழமக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. இதே வேளையில் சிறீலங்கா அரசு தனது இராணுவ பலத்தைப் பலப்படுத்துவதில் தீவிரமாக உள்ளது. உள் காவல் படைகளுக்குப் பாகிஸ்தானில் பயிற்சி, ரிசேர்வ் பொலிஸ் படைகளுக்கு ஆட்சேர்ப்பு, இராணுவத்துக்கு இஸ்ரேலிய ஆள்திரட்ட பத்து மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைகள், தேசிய துணைப்படைக்கு ஆட்கள் சேர்ப்பு - இப்படியாக இராணுவ பலத்தைக் கூட்டும் அரசு ஆயுதங்களையும், யுத்த விமானங்களையும் தொடர்ந்து கொள்முதல் செய்கிறது.

இவற்றையெல்லாம் நோக்குகையில் பேச்சுவார்த்தைகள் - போர்நிறுத்தங்கள் தொடருமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இது போலவே பேச்சுவார்த்தையின் இரண்டாவது கட்டத்தில் ஈழத் தேசிய விடுதலை முன்னணி கலந்து கொள்ளுமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

*** பூட்டான்:** இமய மலைச் சாரலில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் 18 ஆயிரம் சதுர மைல் பரப்பளவையும், 13 இலட்சம் மக்களையும் கொண்ட நாடே பூட்டான். இங்கு 3/4 பங்கினர் பௌத்தர்கள். மிகுதி இந்துக்கள். பேசப்படும் மொழிகள் - ட்ஸோங்கா, நேபாளி, ஆங்கிலம் - இவை மூன்றும் அரசகரும மொழிகள். பூட்டானின் வெளிவிவகார அலுவல்களையும், பாதுகாப்பையும் இந்தியாவே மேற்கொள்கிறது. இதற்கான ஒப்பந்தம் 22 செப்டம்பர் 1947ல் செய்யப்பட்டுள்ளது.

**- கோமதி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வீசுகின்ற தென்றலிலே ★

வீசுகின்ற தென்றலிலே
விசும்புகின்ற விம்மல்கள்
வீரம் பாய்ந்த நெஞ்சினிலே
விறைந்து நிற்கும் எண்ணங்கள்

ஈழத் தெருக்களிலே
இரத்த வெள்ளங்கள்
இனவெறி சிங்கள அரசின்
கொடுங்கோலாட்சியினால்

ஈழப் பிரிவினைக்கோ தடைச் சட்டம்
எம்மினத்தின் மீதோ தாளாத அடக்குமுறை
போர் நிறுத்தமாம் இனவெறி சிங்கள அரசு-ஆனால்
போர் தொடுக்கின்றன மாறு முனையில் - அதன்
கூலிப் படைகள்

மகுடி ஊதுகிறது இனவெறிச் சிங்கள அரசு
மருண்டு விட மாட்டார்கள் ஈழ வீரர்கள்
ஈழ தேசம் மீட்கும் பணி உங்களிடம்
ஈற்றில் முடிய வைத்திடுவீர் ஈழ வீரர்களே

பூட்டான் மகா நாடு!
பொழுது புலத்துமா? எம்மினத்திற்கு!
போர்க்கொடி உயர்த்திடுங்கள் ஈழ வீரர்களே!!
போர்க்களம் புகுந்திடுவீர் ஈழ வீரர்களே!!!

இனவெறி சிங்கள அரசின் இருளைக் களைந்திடுவீர்
ஈழ தேசத்தை மீட்டிடுவீர் - எம் தோழரே
வாழ்க ஈழத்தேசம்! வாழ்க ஈழ மக்கள்
வளர்க ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

[illegible] காரை கேசவன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலை மீதான மீள்பார்வை




ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செய்தித் தொடர்புப் பிரிவான ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தால் (EPIC) பிரான்சில் மேற்கொள்ளப்பட்ட கறுப்பு யூலை (BLACK JULY) பிரகடனம் ஏற்படுத்திய அதிர்வுகளை ஆராய்ந்து பார்த்தல் அவசியமானதாகும், பிரான்சு முழுவதற்கும் இப்பிரகடனம் உரித்தான போதிலும் பரிசிலேயே இது தொடர்பான வேலைகள் பாரிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டன. சர்வதேச அரங்கில் ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக தொடர்ச்சியாக தனித்துவமான வெவ்வேறுபட்ட பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் இந்த செய்தித் திட்டத்திற்கு பிரான்சு வாழ் ஈழமக்களும், ,மனித உரிமைகளை மதிக்கும் பிரான்சு மற்றும் இதர தேச மக்களும் குறிப்பாக ஆபிரிக்கா மக்களும் தந்த ஆதரவு மகத்துவமானதுஆகும்.

கால ஓட்டத்தில் கழுவப்பட்டு மறைத்துவிடும் துயர நினைவுகளைப் போலல்லாது 83 யூலை பதித்தஇரத்தக்காயங்களை மக்களின் மனதிலே மீண்டும் மீண்டும் நினைவூட்டி ஈழப் போரறாட்டத்தின் பங்காளர்களாக அவர்களை ஆக்க வேண்டும் என்பது வரலாற்றுக் கட்டாயமாகும், தொடர்ச்சியாக எம் மக்கள் மீது ஏற்பட்டு வரும் அரச பயங்கரவாதத்துக்கான ஒரே முற்றுப் புள்ளி சுதந்திர ஈழம் தவிர்ந்த வேறொன்றுமில்லை என்பது எம் மக்களின் மனங்களில் இந்தக் கறுப்பு யூலைப் பிரகடனத்தால் மீண்டும் பதிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை பொறுத்த வரையில் கறுப்பு யூலைப் பிரகடனத்தின் நோக்கங்கள் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளன. அரச பயங்கரவாதம் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல், ஈழம் தவிர்ந்த வேறெந்தத் தீர்வும் ஈழமக்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியாது என்ற எண்ணத்தை இங்குள்ள ஈழமக்களிடையே வளர்த்தல், ஈழப்பிரச்சனை தொடர்பாக சர்வதேச அரங்கில் முதலாளித்துவச் செய்தித் தொடர்புச் சாதனங்களால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பொய்ப்பிரச்சாரங்களை முறியடித்து ஈழப்போராட்டத்தின் நியாயமான தன்மைகளை பிரான்சு மக்களிடமும் இதரத் தேச மக்களிடமும் விசுக்கி அவர்களுடன் தோழமை உறவுகளை ஏற்படுத் கொள்ளல் இவற்றுடன் ஈழப்போராட்டத்திற்கான நிதியைச் சேகரித்தல்—இந்த எமது நோக்கங்களில் நாம் கணிசமான வெற்றிகளைப் பெற்றோம்.

அது மாத்திரமல்ல இந்தத் துயர மாதத்தில் கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுவதைத் தவிருங்கள், ஈழவிடுதலையை முன்னெடுக்கும் இயக்கங்களோடு இணைந்து போராட்டப் பணிகளை முன்னெடுங்கள் என்ற எமது வேண்டுகோள்களுக்கு இங்கு வாழும் ஈழமக்கள் வழங்கிய ஆதரவும் மகத்தானது. கறுப்பு யூலையை நினைவு கூரும் வகையில் நாம் விநியோகித்த இலச்சினைக் கொடிகளும், பிரசுரங்களும் பாரிய அளவில் விநியோகிக்கப்பட்டன. இவற்றின் மூலம் குறிப்பிட்ட அளவு நிதிச் சேகரிப்பும் மேற்கொள்ளப்பட்டது. எமது பிரசுரங்கள் தொடர்ச்சியாக சிறீலங்கா அரசாங்கம் ஈழமக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகள் பிரான்சு மக்களிடையே பகிரங்கப்படுத்தப்பட்டன.

நகரின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக இலச்சினைக் கொடிகள் பிரசுரங்கள், உண்டியல்கள் இவற்றுடன் பிரச்சாரங்களை மேற்கொண்ட எமது தோழர்களும் ஆதரவாளர்களும் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. இந்தப் பணிகளில் பெண்களையும் நாம் உள்ளடக்கி அவர்களது பங்களிப்பையும் வலியுறுத்தினோம்.

ஈழப்போராட்டத்தில் பூட்டான் பேச்சுவார்த்தைகள் உறங்குநிலையைத் தோற்றுவித்த இக்காலகட்டத்தில் மக்கள் மத்தியில் விழிப்பு நிலையைத் தோற்றும் வகையில் இக்கறுப்பு யூலைப் பிரகடனம் அமைந்திருந்தது. குறிப்பிடத்தக்கது, ஈழப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்ட வரலாற்றில் ஒரு போராட்ட முன்னெடுப்பு பிரகடனத்திற்காக 31 நாட்கள் நினைவு கூரப்பட்டமை இதுவே முதற்தடவை, இந்த முதல் அனுபவமே ஈழப்போராட்டத்திற்கு மக்கள் தரும் மகத்தான ஆதரவை எமக்குக் காட்டியுள்ளது.

எனவே கறுப்பு யூலைப் பிரகடனம் வெற்றிபெற எம்மோடு இணைந்து பங்கு கொண்ட அனைத்துத் தோழர் தோழியருக்கும் ஆதரவு வழங்கிய அனைத்து மக்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் சார்பாக ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் புரட்சிகர வணக்கங்களும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளும்.

'அனைத்துச் சக்திகளையும் இணைத்து ஈழப் போராட்டத்தை முன்னெடுப்போம்'

▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲

★ நிக்காரகுவா புரட்சி நீடுழி வாழ்க

★ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்
ஆக்கிரமிப்பு முயற்சிகளை முறியடிப்போம்

★ அமெரிக்க ஏகாதிபத்தியமே!
நிக்காரகுவாவும் ஈழமும் மற்றிரு வியட்நாம்கள்


★ போர்களற்ற உலகு செய்வோம்

**உலக சமாதானத்திற்காகப் போராடுவோம்!**

**ஈழ மாணவர் பொதுமன்றம் (GUES)**

**(EPRLF-ன் மாணவர் அமைப்பு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தங்கை



# நிக்கராகுவாத் தங்கை

வெளியீடு: தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamoul Murasu

MURASU -3 OLY-10
AOUT 1985



## TERRORISME DES FORCES SRILANKAIS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# EDITORIAL



## *LA NEGOCIATION DE BHUTAN ET LE TAMOUL EELAM*

*Le gouvernement Srilankais demontre que le problème Tamoul est un problème interne, mais de l'autre côté, il affiche au monde entier que les militants Tamouls sont des terroristes. Le ministre de Sécurité Mr.Adoulad Mudali et le président de la république J.R.Jeyawardene faisaient savoir qu'ils ne souhaitent pas d'avoir un entretien avec les combattants de libération, car selon eux, les combattants de libération sont des terroristes.*

*Mais à cause des attaques intensives et mortelles portées par les combattants de libération au gouvernement chauviniste Singhalais J.R.Jeyawardene, change de politique et accepta d'avoir un pour parler avec le groupe Tamoul. Le gouvernement Srilankais, demanda au gouvernement Indien de bien vouloir intervenir durant les pourparlers qui auront lieu entre les groupes Tamouls et le gouvernement Srilankais. Après la seconde rencontre avec les répresentants Indiens, la majorité des organisations du peuple Eelam, comme "Le Front National d'Eelam", ont accepté à participer aux pourparlers qui a eu lieu dans l'état himalayan de Bhutan à Thimbu.*

*Du côté de la population, celle-ci n'était pas d'accord aux pourparlers ci-dessus; la population de Jaffna, Mannar, Vavuniya a montré son mécontement, en fermant les écoles et en manifestant tout le long de la route. Cette protestation montre que le peuple tamoul est en desaccord avec les pourparlers qui a eu lieu à Bhutan. Le peuple d'Eelam souhaite que l'ENLF continue à combattre avec des armes à feu, car celle-ci est la seule façon d'atteindre le but.*

*En même temps le gouvernement Srilankais ne se souci pas de résoudre le problème Tamoule pendant les pourparlers, mais le gouvernement Srilankais voulait montrer au monde entier qu'il ne cherche pas à trouver une solution au problème posé par voie militaire. Alors ce gouvernement Srilankais essaye d'attirer le monde qu'il fait son mieux de s'asseoir au tour de la table dans le but de négocier en prenant les mesures humaines en levant le blocage d'aide d'internement et à travers de ce-ci on pourrait croire que la democratie règne en Srilanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COMMEMORATION DU POGROM AU MOIS DE JUILLET 1983

Le 25 et le 26 juillet, un "Hartal" a eu lieu sous forme de fermeture des boutiques et autres établissements dans les régions tamoules, soient le nord et l'est du pays. Cet Hartal a été organisé par l'organisation pour la libération d'Eelam. A la veille de la dite commemoration du juillet 1983, dans lequel périssent 2000 tamouls, éliminés par la force armée Srilankaise et les voyous Singhalais. 53 prisonniers politiques y compris les fondateurs de l'organisation pour la libération d'Eelam Thangathurai, Kuttimani et Jegan ont été massacrés à la prison "Welikade" à Colombo, avec l'approbation du gouvernement selon un plan génocide crée par ce même gouvernement.

Pendant ces deux jours, la grève des cours a été pratiqué par les jeunes Tamouls et puis les boutiques suivent l'exemple des jeunes Tamouls en fermant leurs boutiques. Les examens ont été interrompus dans les écoles à cause du "Hartal". Les bureaux publics fermaient leurs portes à midi qui comme habituel ce n'était pas le cas.

## LA MUNICIPALITE DE JAFFNA A ETE INTERPELLEE PAR LA COMPAGNIE D'ELECTRICITE

La compagnie d'electricité appartenant à l'état Srilankais a émis une notice de couleur rouge à la municipalité de Jaffna. La municipalité, à cause de son retard de paiement et pour les 10 derniers mois, devait à la compagnie d'élèctricité 20 000 000 roupies (7,5 millions de francs). La coupure du courant aurait leur eminemment, si la somme dûe n'était pas acquittée.

Les services municipaux font l'enquête sur les retard de payement parmi les abonnés durant les 10 derniers mois. Il est à rappeler que les annexes des Banques fermaient leurs portes dans la ville de Jaffna, à cause de la lutte armée menée par les combattants de libération. Même, le gouvernement ne pouvait rien de l'arrêt des entreprises publiques et comme dérivation, il accuse le peuple Tamoul à tous ses malheurs mais indirectement.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE GOUVERNEMENT SRILANKAIS OUTRE PASSE LA CONDITION DE CESSE-LE-FEU

Ayant accordé des conditions favorables de créer un atmosphère paisible pour retrouver la condition normale dans les régions tamoules, ouverture de dialogue, le gouvernement Srilankais délibérement exerse la violence d'état dans la région de l'est de l'île, installe ainsi la terreur et angoise parmi la population tamoule de cette région.

Le 11 juillet 1985, la garde nationale (home guards) à l'aide de service de sécurité gouvernemental font du tapage dans le département de Vavuniya. Cette bande de vaurien dérobe de biens valeureux des Tamouls, brutalise les Tamouls et incendie les maisons appartenant aux Tamouls. Cette garde nationale a été formée par le service de sécurité gouvernemental, qui les fournit en plus les armes la plus moderne qui existent.

Pendant le tapage de la garde nationale dans la région de l'est, il y a de la perte des vies humaines. Les tamouls blessés devaient trouver le réfuge dans la forêt.

Le 20 juillet 1985, les forces de sécurité font du tapage à Polikandy dans le département de Jaffna. Ils ont abattu des Tamouls en les accusant d'être des terroristes. Beaucoup des gens par crainte ont fui cette région ou encore se réfugent dans les écoles.

Il n'y a pas de doute que le gouvernement Srilankais a l'intention d'anéantir complètement la nation Tamoule du sol Srilankais. Le gouvernement ne se prépare pas à résoudre le problème Tamoule.

## RASSEMBLEMENT DEVANT L'AMBASSADE INDIENNE

Le 5 août, 1985, les tamouls vivant en France se rassemblent devant l'ambassade Indienne, en signe de protestation contre la violation de la pre-condition du cessez-le-feu, demandant ainsi au gouvernement Indien d'intervenir pour que la condition du cessez-le-feu soit respecté. Ce rassemblement aura lieu devant l'ambassade Indienne, car le gouvernement Indien, est médiateur entre les tamouls et le gouvernement Srilankais.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LES POURPARLERS A BHUTAN

Après la déclaration de cessez-le-feu du 18 juin, puis l'annonce en ce qui concerne les pourparlers entre le gouvernement Srilankais et les militants Tamouls, celle-ci est contre dite par les militants Tamouls, affiremant que la durée du cessez-le-feu, et qui est proposée, ne concorde pas. Partant de ce point de vue, les militants dans l'immédiate ne varient pas de leur opinion. Pourtant, par la proposition très aimable du gouvernement indien, les pourparlers commençait à Thimbu, la capitale de Bhutan, le 8 juillet. La presse a été exclue, pas de communication ni de consultation durant les pourparlers sauf une ligne téléphonique spéciale qui est à la disposition du gouvernement Indien.

Il y avait certain réfus de la part de la communauté Tamoule, en Srilanka et à l'étranger, vis-à-vis du cessez-le-feu et les pourparlers. Il est à croire que ces pourparlers ont été proposés par le gouvernement Srilankais dans le but de gagner le temps. Il est à rappeler que dans le département de Batticoloa 3 camps de commando ont été ouverts; la garde nationale a été envoyé à Pakistan pour l'entrainement; ont été commandés les hélicoptères de combat, les navires de guerre et bien d'autres équipements militaires ne manquent pas sur la liste de commande; les militaires ont été envoyés à l'étranger pour suivre des entrainements toute de suite après cessez-le-feu. Il est à croire que l'orientation du gouvernement c'est de paralyser les combattants de liberté mais que d'autre côté il se prepare pour un assaut capital.

Aux pourparlers le point central c'est les conditions portant sur le cessez-le-feu. Parmi les sujets élaborés figure la libération des Tamouls de tenus. Pourtant le gouvernement Srilankais affirme que depuis 673 prisonniers ont été libérés mais cette nouvelle est restée douteuse.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Le gouvernement Srilankais proposa le "conseil départemental" comme une mesure politique en même temps qu'une solution politique. Pourtant cette proposition a été rejetée par tous les représentants de tous les partis y compris ceux du Front Unifié pour la Libération de Tamoul, ce qui était la même rejetée par tous les partis dans la rencontre de tous les partis politiques en décembre 1984. Une fois de plus, par l'intermédiaire du gouvernement Indien les tamouls posent les conditions faute de la continuation du pourparlers. Ces conditions sont ci-dessous:

- Reconnaître les tamouls en tant qu'une nation.
- Reconnaître que les tamouls ont leur propre territoire.
- Reconnaître que les tamouls ont le droit d'auto determination.
- Reconnaître que toutes les personnes depuis l'indépendance et leurs descendants comme citoyens à part entière de Srilanka.

Les pourparlers prendront pour le 12 août, 1985.

## TROIS VOYAGEURS ONT ETE ABATTUS PAR LES FORCES ARMEES

Le 22 juillet, 1985, 3 voyageurs en attendant le bus au bus halte à Karainagar ont été abattus par les forces armées. Durant cet incident il y a bien d'autres qui sont blessés. Les personnes ci-dessous ont été abattus par les forces armées. Ce sont:

1. Subramaniam Sothinathan (26 ans)
2. Thambiah (61 ans)
3. Sinnathamby Tharmalingam (45 ans)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Les personnes blessées ont été transportées dans un camion en direction de l'hôpital de Jaffna. Pourtant elles ont été arrêtés durant de trajet vers l'hôpital par les camions militaires.

Ce-ci est un autre exemple d'un élimination arbitraire des personnes par les forces armées.

## LES JEUNES TAMOULS EXTRADES ONT ETE ARRETES PAR LES FORCES ARMEES SRILANKAISES

Les jeunes Tamouls, fuyant le Srilanka en sauvegardant leur vie demandent d'asile politique dans les autres pays. Des jeunes Tamouls innocents extradés par l'Italie et la Suisse sont revenus au pays. Les jeunes extradés dès leur retour au Srilanka sont arrêtés par la police de Colombo. Ils sont torturés cruellement. Leur situation actuelle est une mystère.

POUR TOUTES LES CORROSPONDANCES

L'EDITEUR
TAMOUL MURASU
CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM
10,RUE DES MARTYRS
75009-PARIS
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LA VICTOIRE



# FINALE AU NICARAGUA

PUBLIE PAR CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org